1045

...ரக்தகர்த்தா
...ிரசுரகர்த்தா } வை. மு. கோதைநாயகி அம்மாள்

# JEGAN MOHINI

# ஜெகன்மோகினி.

மலர் III 1925 இதழ் 2.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-DEC 1925
MADRAS



...கன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

JL
ஈ21'',N22 5m
N25·3·2
182820

# ஜெகன்மோகினி.

இது நாவல்கள் அடங்கிய ஒரு மாதாந்த சஞ்சிகை. பிரஸித்திபெற்ற நாவல் ஆசிரியரான ஸ்ரீமான் வடுவூர். கே. துரைஸாமி ஐயங்கார் அவர்கள் B. A. யால் இயற்றப்பெற்ற காளிங்கராயன் கோட்டை ரகஸியம், விலாஸவதி முதலிய மகா அற்புதமான நாவல்கள் இந்த சஞ்சிகையின் வாயிலாகவே வெளிவந்தன. இந்த சஞ்சிகையின் 3-வது ஆண்டு நாளது 1925 ௵ செப்டம்பர் ௴ 15௳ முதல் ஆரம்பமாகிறது. இந்த மூன்றாவது ஆண்டில், ஷெ நூலாசிரியரால் பார்வையிடப்பட்டதும், திருவல்லிக்கேணியிலுள்ள ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் என்பவரால் இயற்றப்பட்டதுமான வைதேகி என்ற ஓர் அதிசயமான நாவல் வெளியாகி வருகிறது. நம் தேசத்துப் பெண்மணிகள் தெரிந்துகொள்ளத்தக்க படிப்பினைகளும் குடும்ப விஷயங்களும் இதில் ஏராளமாக அடங்கி இருக்கும். மாதம் ஒன்றுக்கு டிம்மி 40 பக்கங்கள் உள்ள கதை வெளியாகும்.

| | |
|---|---|
| உள் நாட்டுக்கு வருஷ சந்தா | ரூ. 1 8 0 |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய அயல் தேசங்களுக்கு | ரூ. 2 0 0 |

அயல் நாட்டாருக்கு வி. பி. யில் அனுப்பினால் தபாற்செலவு மாத்திரம் ரூ. 1—4—0 ஆகுமாதலால் அவர்கள் சந்தாப்பணத்தை மணியார்டராகவே அனுப்பவேண்டும்.

| | |
|---|---|
| மாதிரிப் பிரதியின் விலை | ரூ. 0 3 0 |

விளம்பர விகிதம் எழுதித்தெரிந்து கொள்ளவும்.

இந்த சஞ்சிகை வேண்டுவோர் அடியில் காணப்படும் விலாஸத்திற்கு எழுதவும்:—

மானேஜர்,

ஜெகன்மோகினி ஆபீஸ்,

26. தோடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

## 2-வது அதிகாரம்.

### காரிகை மனங்கவர்ந்த கட்டழகன்.

மயக்க மருந்தை உண்டதனால் ஸ்மரணை தப்பிய நிலைமையில் கூனற்கிழவி படுக்கவைக்கப்பெற்றிருந்த வீணைப்பெட்டியைக் குதிரை வண்டியில் வைத்துக்கொண்டு செங்கான்கடை சாரங்க பாணி முதலியாரும் அவரது கையாளும் சென்ற பிறகு, நமது அருங் குணமணியான வைதேகி என்ன செய்தாளென்பதை நாம் கவனிப் போம். அந்த வடிவழகி தனக்கு நேர இருந்த பெருத்த அபா யத்திலிருந்து தான் தப்பித்துக் கொண்டதைப்பற்றி நிரம்பவும் சந் தோஷமும் மனக்கிளர்ச்சியும் அடைந்தாளேனும், அவளது மனம் இன்னதென்று விவரிக்க இயலாத ஒருவித சஞ்சலத்தை அடைந்த தன்றி, வயிறு முதலிய அங்கங்களிலெல்லாம் ஒருவகையான குழப் பமும் உபத்திரவமும் தோன்றிப் பெருகி வதைக்கவாரம்பித்தன. வீணைப்பெட்டியோடு தேனும்பேட்டைக்குப் போகும் தனது பாட்டி எப்படியும் இரண்டொரு நாழிகை காலத்தில் திரும்பி வீட்டிற்கு வந்துவிடுவாளென்பது நிச்சயமாகத் தோன்றியதாகையால், தான் அவளை ஏமாற்றியதைப்பற்றி, அவள் தன்மீது கடுமையான ஆத்திர மும் கோபமும் கொண்டு, தன்னை மகா குரூரமாக தண்டிப்பாள், அல் லது, மறுபடியும் ஏதாவது தந்திரம் செய்தோ, அல்லது, பலாத் காரத்தை உபயோகப்படுத்தியோ தன்னை அந்தப் பெரிய மனிதரிடம் அனுப்பிவிட எத்தனிப்பாள் என்ற நினைவு அந்த மடமங்கையினது மனதில் தோன்றித்தோன்றி, பெருத்த திகிலையும், கலக்கத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்கிக்கொண்டே இருந்தது. தனக்கு நேர இருந்த பெரிய பொல்லாங்கு தீர்ந்துபோனதாகத் தோன்றாமல், அதற்குமேல்தான் ஆரம்பமாகப் போவதுபோலத் தோன்றியது. கிழவி வீட்டிற்குத் திரும்பி வந்து என்னசெய்வாளோ என்று நினைக்க நினைக்க, அவளது மனம் விவரிக்க இயலாத கலவரமடைந்ததன்றி, தான் உடனே புறப்பட்டு எங்கேயாவது போய்விடலாமா வென்ற நினைவை மறுபடி மறுபடி உண்டாக்கியது. ஒன்றையுமறியாத யௌ வனக் குமரியான தான் அந்த இரவில் வீட்டைவிட்டு வெளியில்

போவது அவளுக்கு நிரம்பவும் பயங்கரமாகத் தோன்றியதாகையால், அவள் இருதலைக்கொள்ளி எறும்புபோல, எந்த வழியிலும் செல்ல மாட்டாதவளாய் அச்சமே வடிவாக இருந்தாள். சாரங்கபாணி முதலியாரும் அவரது கையாளும் தோன்றி வீணைப்பெட்டியை எடுத்துக் கொண்டு போன சமயத்தில், வைதேகி ஏதோ ஒரு முகாந்திரத்தை வைத்துக்கொண்டு மூன்றாவது வீட்டிற்குப்போய் அந்த வீட்டுப் பெண்பிள்ளைகளிடம் சிறிது நேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்த பின், தனது வீட்டிற்கு வந்து வாசற்கதவை மூடி உள்பக்கத்தில் தாளிட்டுக்கொண்டு வீட்டிற்குள் சென்று கூடத்தில் தொங்கிக்கொண் டிருந்த ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்து முன் விவரிக்கப்பட்டபடி திகிலும் குழப்பமுமடைந்தவளாய் எண்ணமிட்டிருந்தாள். தனது மன அவஸ்தையில், தான் போஜனம் செய்ய வேண்டுமென்ற அவா கூட அவளது மனதில் தோன்றவில்லை. அதற்குமுன் இரவு எட்டு மணிக்கே அவள் சயனித்துத் தூங்குவது வழக்கமாயினும், அன்று, சயனத்தையும் அவளது தேகம் நாடவில்லை. தனது மன வேதனையில், அன்று தனக்குத் தூக்கமே பிடியாதென்ற உணர்ச்சியும் ஏற்பட்டது. அதுகாறும் இரவில் கிழவியோடு கூடவே இருந்து பழகியவளாதலால், அப்போது அந்த வீட்டில் தனியாக இருந்தது அவளுக்கு மிகுந்த சஞ்சலத்தை உண்டாக்கியது. தான் அவ்விடத்திலிருப்பதைவிட, மேன்மாடத்திற்குப் போனால், தனது மனம் கொஞ்சமாகிலும் அமைதியடையுமா வென்பதைப் பார்க்கவேண்டுமென்ற ஒரு யோசனை தோன்றியது. ஆகவே, அந்த மின்னற்கொடியாள் உள்ளே சென்று, ஒரு செம்பில் தண்ணீர் எடுத்து சிறிதளவு அருந்தித் தனது தாகத்தைத் தணித்துக் கொண்டபின் அவ்விடத்திலிருந்த விளக்கைக் கையிலெடுத்துக்கொண்டு மெத்தைப்படிகளின் வழியாய் மெதுவாக மேலே ஏறி மேன்மாடத்தை யடைந்து, விளக்கை வழக்கமாக வைக்கிற ஒரு புரையில் வைத்து, அதன் திரியைக் கீழே இறக்கி, பிரகாசத்தைக் குறைத்து வைத்துவிட்டுத் தனது விசிப்பலகையின்மீது உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொண்டாள்.

அவளது வீடு இருந்த தெரு ஒதுப்புரமான இடமாதலால், அவ்விடம் மனிதரது நடமாட்டமாவது கூச்சலாவது அற்றதாய், நிச்சப்தமாகக் காணப்பட்டது. கீழ்த்திசையில் நிரம்பவும் அருகிலிருந்த

182820

கடலின் ஆரவாரம் மாத்திரம் 'ஹோ' என்று பிரமாதமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அன்று பௌர்ணமி கழிந்த மூன்றாவது தினமாத லால், சிறிதளவு குறைந்துபோன பெருத்த சந்திரபிம்பம் அப் போதே கீழ்த்திசையில் முளைத்தெழுந்த காட்சி விவரிக்க இயலாத பிரம்மாநந்தக் காட்சியாக இருந்தது. பிரிந்தவர்க்கு நஞ்சாகவும், கூடிய வர்க்கு அமிர்தமாகவும் விளங்கும் அற்புதசக்தி வாய்ந்த குளிர்ந்த சந் திரன் தோன்றவே, அலைகள் கோடாநுகோடியாய்ப் பெருகிக் கொந் தளித்தெழுந்து ஒன்றன்மேலொன்று விழுந்து மோதி உருண்டு புரண்டு திரண்டு கரைமீது வெகுதூரம் வந்து மோதத்தொடங்கின. யௌவனப் பருவத்து மங்கையரும் காளையரும் புதுமோகங்கொண்டு, அதன் வெறியால் மதிமயங்கி யிருக்கும் நிலைமையில் புதிதாக ஒரு வரையொருவர் காணுங்காலையில், அவர்களது மனதில் தோன்றும் மூர்க்கமான எண்ணங்களாகிய அலைகள் எவ்வாறு கட்டுக்கடங்காமல் ஆர்ப்பரித்து நிலைதடுமாறித் தவித்து அலைந்து தாண்டவம்புரி யுமோ, அதுபோலவே, சந்திரனைக் கண்ட கடலின் நிலைமையும் விவரிக்க இயலாத அமர்க்களக் காட்சியாக இருந்தது. அவ்வாறு கடல் முழுதும் ஒரே அலை மயமாக மாறித் தனது இடத்தை விட்டுப் பிரயாணம் புறப்படவே, கடலின்மேலிருந்த காற்று முன்னி லும் அதிக விசையாக ஊருக்குள் புகுந்து மோதத் தலைப்பட்டது. இரவு முதிர முதிர, சூரியனது வெப்பம் குறையக் குறைய, கடல் நீரின் குளிர்ச்சியும், சந்திரனது இனிமையும் காற்றில் கலக்கக் கலக்க, ஊருக்குள் வீசிய மந்தமாருதத்தின் குளிர்ச்சியும் இன்பமும் பதி னாயிரமடங்கு அதிகரித்ததாய் மாறி, மனிதர் முதல் பூச்சி புழு மரஞ் செடி கொடி முதலிய சகலமான ஜீவராசிகளையும் அமிர்தக் கடலில் ஆழ்த்தி ஆநந்த மயமாய் நிரப்பியது. தெய்விகமான தனது பிர காசத்தை துன்மார்க்கச் செய்கைகளில் உபயோகிக்கும் கள்வர்கள், வேசைகள், தாசிகள், சூதாடிகள், குடிகாரர்கள், துஷ்ட மிருகங்கள் முதலியோருக்குப் பகைவனாகவும், இளந்தம்பதிகளுக்கு உகந்த நண்பனாகவும் தோன்றிய குளிர்ந்த மாமதியைக் காணவே, தனது கணவனைக் கண்டு அஞ்சி, நாணிக்கோணி அங்குமிங்கும் போய் மறைந்து கொள்ளும் உத்தமபத்தினியைப் போல், இருள் அஞ்சி நடுங்கி, சந்திரன் தன்னைக் காணாதபடி கட்டிடங்களின் மறைவிலும்,

மரங்களின் மறைவிலும், மனிதர்களது மறைவிலும் ஒளிந்து கொள்ளத் தொடங்கியது. முக்கியமான பெரிய வீதிகளைத் தவிர, சிறிய தெருக்களில் ஜன நடமாட்டம் அவ்வளவாக இல்லாமலிருந்தது. ஆங்காங்கு மாளிகைகளின் மேன்மாடங்களில் ஹார்மோனியம் முதலிய வாத்தியங்களை வைத்து சிறுமிகளும் யௌவன மடந்தையரும் உல்லாஸமாகப் பாடிய இனிய ஓசை எழுந்து பரவிக்கொண்டிருந்தது. கால்நாழிகைக் கொருதரம் "ஸந்திப் பிச்சே தாயே" என்று இராப்பிச்சைக்காரர்கள் கூச்சலிடும் ஓசையும், இரண்டொரு நாய்கள் குலைக்கும் ஓசையும் தோன்றி, சங்கீத ஒலியின் மகிமையையும் கவர்ச்சியையும் அதிகரிக்கச் செய்துகொண்டிருந்தன.

அத்தகைய காட்சிகள் நிறைந்த இரவில் சந்திரனது பால் போன்ற நிலவு மாடங்களிலும் மாளிகைகளிலும் வீதிகளிலும் பரவி அவற்றிற்கு வெள்ளிமுலாம் பூசி இனிமையைப் பரப்பிக்கொண்டிருந்த சமயத்தில், வைதேகி தனது மேன்மாடத்தில் விசிப்பலகையின்மேல் உட்கார்ந்து சுவரில் சாய்ந்திருந்த வண்ணம், ஆகாயமாகிய நந்தவனத்தில் நக்ஷத்திரங்களாகிய மல்லிகைப் புஷ்பங்கள் புதிது புதிதாக வெடித்துக்கொண்டிருந்த அதிவிநோதக் காட்சியைப் பார்த்தபடி மிகுந்த ஸஞ்சலத்தி லாழ்ந்து சிந்தனை செய்திருக்க, பொழுது கழிந்துகொண்டே போனது. கிழவி மறுபடி தோன்றி தன்னை வருத்துவதைத் தான் எப்படித் தடுப்பது என்ற விஷயத்தில் அவள் எவ்விதமுடிவையும் செய்யமாட்டாதவளாய் அசைவற்று சித்திரப் பதுமைபோல வீற்றிருந்தாள். பொழுது ஏற ஏற, கிழவி வந்து விடுவாள் என்ற திகிலும் கலக்கமும் உதறலும் அதிகரிக்கத் தொடங்கின. அப்போதைக்கப்போது தெருவில் வண்டி அல்லது மனிதர் வந்த ஓசை உண்டானால், அவளது உடம்பு தானாகவே திடுக்கிட்டுத் தூக்கிப் போடத் தொடங்கியது. அவள் உடனே எழுந்து முன்பக்கத்திலிருந்த ஜன்னலின் வழியாகக் கீழே குனிந்து பார்த்து, கிழவி வரவில்லை யென்பதை நிச்சயித்துக்கொண்டு மறுபடி தானிருந்த இடத்தை யடைவாள். அவ்வாறு அவள் விவரிக்க இயலாத கலவரமடைந்து தத்தளித்த நிலைமையில் இருந்து வேதனை யுற்றிருக்க, தெற்குத் திக்கில் வெகுதூரத்திற்கப்பால் மேளம், பாண்டு வாத்தியம் முதலியவற்றின் பெருமுழக்கம் தோன்றியது. சிறிது

நேரம் வரையில் அந்த ஆரவாரத்தை அவள் உணராமல் தனது சொந்தச் சிந்தனையிலேயே தனது முழுகவனத்தையும் செலுத்தியிருந்தாள். அந்த வாத்திய முழக்கம் அவளிருந்த இடத்திற்கு நிரம்பவும் பக்கத்தில் வந்தபோதே, அவள் அதைக் கவனித்து, அது என்னவென்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஒருவித வேட்கையினால் தூண்டப்பட்டவளாய் அந்த மேன்மாடத்தின் தென்புறத்திலிருந்த ஜன்னலையடைந்து அதன் கதவுகளைத்திறந்து விட்டுத் தனது பார்வையை, ஓசையுண்டான திக்கில் செலுத்தி உற்று நோக்கினாள். அன்றையதினம் திருவல்லிக்கேணி பார்த்தஸாரதி ஸ்வாமி கோவிலில் ஏதோ விசேஷ தினத்தைக் கருதி ஸ்வாமி புறப்பட்டு வீதிவலம் வந்து கொண்டிருந்த காட்சியை நமது வைதேகி கண்டாள். அவளது மனதில் உடனே பக்திரஸம் பெருகத் தொடங்கியது. அதுகாறும் அவளது மனதை உலப்பிக்கொண்டிருந்த கவலைகளும், துன்பங்களும் அந்த ஒரு நிமிஷநேரம் மனதில் உறைக்காமல் விலகிநின்றன. அவள் அழகான தனது கரங்களை எடுத்துக் குவித்துக் கண்களை மூடியபடி ஸ்வாமியைத் தோத்திரம் செய்யலானாள். "சுவாமி! பார்த்தஸாரதிப் பெருமாளே! இந்த அண்டாண்ட பிரம்மாண்டங்களையும் அவற்றிலுள்ள கோடாநுகோடி ஜீவராசிகளையும் படைத்துக் காத்தழிக்கும் சர்வ வல்லமையும் சர்வஞத்வமும் பெற்ற உமக்கு இந்த ஏழை படும் பாடு தெரியவில்லையா? இத்தனை நாளாக நான் உம்மைக் கூவியழைத்து ஸ்தோத்திரம் செய்து, எனக்கு ஒரு நல்ல வழி காட்டவேண்டுமென்று முறையிட்டதெல்லாம் உமது திருச்செவிக்கு எட்டவில்லையா? இந்தக் கிழவியினிடத்தில் அகப்பட்டுக்கொண்டு நான் இன்னம் எவ்வளவு காலத்திற்குத் துன்பப்படவேண்டுமோ தெரியவில்லையே! இதுவரையில் அவள் தன்னுடைய துன்மார்க்க எண்ணங்களை ஜாடை ஜாடையாகக் காட்டிவந்தாளேயன்றி, இன்று செய்ததுபோல, இப்படிப்பட்ட மோசடியில் இறங்கியதில்லை. இப்போது அவள் மறுபடி வீட்டிற்குத் திரும்பிவந்து என்னை எவ்விதத்தில் வருத்துவாளோ தெரியவில்லையே! ஸ்வாமி! ஆண்டவனே! பரம ஏழையும், எதற்கும் உபயோகமற்ற சுத்த அபலையுமான என்னை நீர் இன்னமுமா சோதனைக்கு உள்படுத்த வேண்டும். ஏழை உயிர்களாகிய நாங்கள் படுங்

துயரமெல்லாம் உமக்கு ஸந்தோஷமாக இருக்கிறதா? அல்லது, நான் விடும் கண்ணீர் உமது ஸந்நிதி வரையில் எட்டவில்லையா? ஹே! பக்தவத்ஸலா! பரந்தாமா! கிருபாநிதே! முன் காலத்தில் திரௌபதையின் மானத்தைக் காப்பாற்ற ஓடிவந்த காருண்யமும் வாத்சல்யமும் என் விஷயத்தில் இல்லாமல் போய்விட்டனவா? திரௌபதையும் என்னைப்போல ஒரு மானிட ஸ்திரீதானே! அவள்மாத்திரம்உமது கருணைக்குப் பாத்திரமானதென்ன? நான் அருகமற்றவளாய்ப்போனதென்ன? என்னப்பனே! ஜெகதீசா! போதும் உமது பராமுகம்! இனியாவது இந்த ஏழையின்மேல் அருள் பாலித்து,இன்றைய இரவில் எனக்கு இந்தக் கிழவியினுல் எவ்வித துன்பமும் நேராதபடி காத்து ரக்ஷித்து, இனி நான் மானமாக வாழ்வதற்கு ஏதாவது ஒரு நல்ல வழி காட்டவேண்டும். என் அப்பனே! ஸ்வாமி! பெருமாளே! முன் காலத்திலிருந்த மகாராஜாக்களெல்லோரும் இராக்காலங்களில் நகர பரிசோதனைக்காக வெளியில் வந்து சுற்றுவதும், வலியோரால் எளியோர் துன்புறுமல் காப்பாற்றுவதும் வழக்கமாக இருந்து வந்தன. இப்போது என்னைப் போன்றவர்கள் முறையிட்டுக் கொள்வதற்கு அப்பேர்ப்பட்ட அரசர்கள் இல்லை. நான் போய் போலீசார் முதலியோரிடம் முறையிட்டுக்கொண்டால், இது அவர்கள் தலையிடக் கூடிய குற்றமில்லை என்று சொல்லி என்னை அனுப்பிவிடுவார்கள். அல்லது, அவர்களுள் துஷ்டர்களாயிருப்பவர்கள், கிழவியிடம் கைக்கூலி பெற்று என்னையே உபத்திரவிக்க ஆரம்பித்தாலும் ஆரம்பிப்பார்கள். இந்த நிலைமையில் என்னைப்போன்றவர்களுக்கு உமது துணையே உற்றதுணையன்றி வேறு துணையில்லை. நீர் அடிக்கடி ஊர் வலம் வந்து கோவிலுக்குப் போவது உம்முடைய பெருமையையும் செல்வத்தையும் செல்வாக்கையும் ஜனங்களுக்குக் காட்டுவதற்காகவா, அல்லது, ஆங்காங்கு உள்ள ஜனங்களின் துயரைக் களைவதற்காகவா என்பதே எனக்கு ஸந்தேகமாக இருக்கிறது. நீர் அடிக்கடி நிரம்பவும் கோலாகலமாக பவனிவந்து போய்க்கொண்டே இருக்கிறீர். வாணங்களும், அவுட்டுகளும், விளக்கெண்ணெயும்,புஷ்பங்களும், பணமும் ஏராளமாகச் செலவாகிக்கொண்டே இருக்கின்றன. என்னைப் போன்ற ஏழை ஜனங்களின் துயரங்களும் துன்பங்களும் அப்படியப்படியே இருந்துகொண்டே இருக்கின்றன. உமக்குப் பக்கத்திலிருந்தே

துஷ்டர்களும் துன்மார்க்கர்களும், அக்கிரமங்களேயும் அட்டூழியங்க ளேயும் சிறிதும் கூச்சமின்றி நடத்தி, அதனுல் அக்கிரமவழிகளில் பொருள்தேடிப் பெரியமனிதர் ஆகிக்கொண்டே இருக்கிருர்கள். என்ன கருத்தோடு, எல்லாவற்றையும் பார்த்தும் பாராதர்போல நீர் மௌன மாகவே இருக்கிறீரோ தெரியவில்லேயே! ஸ்வாமி பெருமாளே! நீர் மற்றவர் விஷயத்தில் எப்படியாவது நடந்துகொள்ளும். முற்றிலும் அநாதையான இந்த ஏழையை மாத்திரம் நீர் புறக்கணித்துப் பராமுக மாய் விடாமல் எப்படியாவது காப்பாற்றி ரக்ஷிக்கவேண்டும். கருணு நிதே! என்னுடைய நிலேமை இத்தனைநாள் இருந்ததுபோல இப்போது இல்லே. இன்று கிழவியின் காரியம் நிரம்பவும் விபரீதத்திற்கு வந் திருக்கிறது. என்னுடைய நிலேமை பரம சங்கடமான நிலேமையாக இருக்கிறது. சரியான தருணத்தில் திரௌபதையின் மானத்தைக் காத்ததுபோல, இன்று நீர் எப்படியாவது என் மானத்தைக் காப் பாற்றி, எனக்கு ஏதாவது ஒரு நல்லவழி காட்டியே தீரவேண்டும். இல்லேயானுல், என்னைக் கூடிய சீக்கிரத்தில் உமதுபாதத்தடியிலாவது சேர்த்துக்கொள்ளவேண்டும். நான் பரம ஏழை, திக்கற்ற அநாதை, மனித சகாயமற்ற கொடிய பாவி, எவரது இரக்கத்திற்கும் அருக மாகாத மகா தோஷி. இன்றுதான் கடைசி நாள். நீர்தான் எனக் குப்புகலிடம். நான் உமக்கு அபயம். என்னைக் கைவிடவேண்டாம் ஸ்வாமீ பெருமாளே!'' என்று வைதேகி கண்ணும் கண்ணீருமாய் நின்று நெக்கு நெக்குருகி வாய்விட்டு ஸ்தோத்திரம் செய்து அப் படியே தெய்வபக்தியில் சிறிதுநேரம் தோய்ந்து பரவசமடைந்து புளகாங்கித மெய்தி மெய்ம்மறந்து நின்றுள். அவ்வாறு அவள் அரைக்கால் நாழிகை காலம் நிற்க, பார்த்தஸாரதி ஸ்வாமி அவளது மனுவை ஏற்றுக்கொண்டதும் ஏற்றுக்கொள்ளாததும் தெரியாத நிச் சலமான முகத்தோற்றத்தோடு மூலே திரும்பி அடுத்த வீதிக்குப் போய்விட்டார்.

ஆனுல் வைதேகியின் மனதில் ''பயப்படாதே! நீ நல்ல எண் ணங்களேயே கொண்டு நல்லமாதிரியாகவே நடந்தால், உனக்கு எப் படியும் நன்மையுண்டாகும். எப்பேர்ப்பட்டவராக இருந்தாலும், உனக்குக்கெடுதல் செய்ய முடியாது'' என்று யாரோ ரகஸியமாகச் சொல்வது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அவளது மனம்

உடனே ஒருவித இன்பத்தையும் அமைதியையும், தைரியத்தையும் அடைந்தது. அதுகாறும் அவளது மனத்தை வதைத்துப் புண் படுத்திக்கொண் டிருந்த கவலைகளெல்லாம் சிறிது ஒய்ந்துபோனதாகத் தோன்றின. அத்தகைய மாறுபட்ட நிலைமையில் நமது மெல்லிய லாள் தெற்குப்பக்கத்து ஜன்னலின் கதவுகளை மறுபடி மூடித்தாளிட் டுக்கொண்டு தானிருந்த விசிப்பலகையை நோக்கி நடந்தாள். அப் போது அந்தத் தெருவில் அமிதமான விசையோடு ஒரு மோட்டார் வண்டி வந்த ஓசைகேட்டது. கேட்கவே, அந்த யௌவன மின்னுளின் உடம்பு, இடியோசையைக் கேட்டு நடுங்குவது போல, திடுக்கிட்டு நடுங்கியது. ஒருவேளை கிழவிதான் தன்னைப் பலவந்தமாகத் தேனும் பேட்டைக்கு அழைத்துக்கொண்டு போவதற்காக மோட்டார் வண்டி யோடு வந்திருக்கிறுளோ வென்ற எண்ணம் மின்னல் தோன்றிமறை வதுபோலப் பளிச்சென்று அவளது மனதில் தோன்றி மறைந்தது. அப்போது அந்த மோட்டார் வண்டி தனது வீட்டின் வாசலண்டை வந்தது தெரிந்ததாகையால், அது வாசலில் நிற்கிறதா, அல்லது, போகிறதா வென்பதை அறிய வேண்டுமென்ற ஆவல் எழுந்து அவ ளைத் தூண்டவே, அவள் சடக்கென்று முன்பக்கத்து ஜன்ன லண்டை பாய்ந்து, அதன் வழியாகக் குனிந்து கீழே நோக்கினுள்.

அவ்வாறு அவள் கீழே பார்த்த சமயத்தில், அவளது வீட்டு வாசலிற்கருகில் ஒரு பயங்கரமான சம்பவம் நிகழ்ந்தது. அந்தத் தெருவின் வழியாக வந்த மோட்டார் வண்டியை அதன் சொந்தக் காரர் நிரம்பவும் விசையாகவும் முரட்டுத்தனமாகவும் ஓட்டிக்கொண்டு வந்தாராதலால், எதிர்ப்பக்கத்திலிருந்து வந்த ஒரு வழிப்போக்கர் வண்டியைக் கண்டு விலகுவதற்கு இடமில்லாமையால், அவர் ஓட்ட மாக் வந்து வைதேகியின் வீட்டு வாசற்படியில் ஏற முயன்றுர். அதற் குள் மோட்டார் வண்டி அவருக்குப் பக்கத்தில் வந்து, அவரது உடம் பில் மோதி ஒருபக்கத்துக் காலின் சதையைப் பிய்த்துக்கொண்டு அப் பால் சென்றது. அந்த அடியைத் தாங்கமாட்டாமல் அந்த வழிப் போக்கர் "அப்பாடா" என்று வீரிட்டவராய் வாசற்படியில் விழுந்து விட்டார். அந்த மனிதர் வீழ்ந்ததைக் கண்ட மோட்டார் வண்டிக் காரர் அவர் இறந்துபோ யிருப்பாரோ என்று நினைத்து, பெருத்த

திகிலும் கலக்கமு மடைந்து தமது மோட்டாரை முன்னிலும் அதிக விசையாக ஓட்டிக்கொண்டு மாயமாய் மறைந்துபோய்விட்டார்.

அந்த மகாபயங்கரமான சம்பவத்தைக் கண்ட வைதேகிக்கு குலை நடுக்கமெடுத்தது. அவளது மனதில் பெருத்த திகிலும் கலக்கமும் விசனமும் கவலையும் தோன்றின. மோட்டார் வண்டியினால் தள்ளப் பட்டுக் கீழே விழுந்தவர் சொற்பமானகாயம் பெற்றிருப்பாரென்றும் உடனே எழுந்திருப்பாரென்றும் அந்த யௌவன மடந்தை நினைத் தாள். ஆனால், அவர் எழுந்திருக்காமல் அசைவற்றுக் கிடந்த தாகத் தெரிந்தது. அண்டை வீட்டிலுள்ள மனிதர்கள் யாராவது அவர் செய்த கூக்குரலைக் கேட்டு வெளியில் வருவார்களோவென்று அவள் எதிர்பார்த்தாள். தெருவில் யாராவது வழிப்போக்கர் வரு வார்களோவென்றும் அவள் தெருவின் இருபக்கங்களிலும் திரும்பி உற்று நோக்கினாள். யாரும் வாராமையால், தெரு நிர்மானுஷ்யமாக இருந்தது. கீழே விழுந்தவர் இறந்துபோயிருக்க மாட்டாரென்ற எண் ணமும், அவர் மூர்ச்சித்தே கிடப்பாரென்ற எண்ணமுமே அவளதுமன தில் முக்கியமாகத் தோன்றினவாதலால், அவர் யாராக இருந்தாலும் பாராமல் தான் உடனே போய் அவருக்குரிய சிகிச்சைகளைச் செய்து மூர்ச்சை தெளிவிக்க வேண்டுமென்ற ஜீவகாருண்ய உணர்ச்சி அவ ளது மனதில் மும்முரமாக எழுந்து அவளைத் தூண்டியதாகையால், தான் யௌவனக் குமரியாக இருந்தாலும், ஆபத்திற்குப் பாவ மில்லையென்று நினைத்தவளாய், அவள் அவ்விடத்தைவிட்டுப் பறந்து ஓடி, புரையிலிருந்த விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு படிகளின் வழியாகக் கீழே இறங்கி, வாசற்கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து பார்த்தாள்.

ஆகா! மோட்டார் வண்டியினால் அடிபட்டு விழுந்திருந்த மனிதர் அப்படியே அலங்கோலமாக அவளது வீட்டு வாசற்படியின்மேல் பிணம்போலக் கிடந்ததைக் காணவே, அவளது தேகம் பதறியது. மனம் தாமரை இலைத் தண்ணீராய்த் தத்தளித்தது. அவர் ஒருகால் இறந்துபோயிருப்பாரோ என்ற பெருத்த திகில் அவளது மனதில் குடிகொண்டு, அவளது உடம்பை நடுக்குவித்தது. அவளது கை கால்களெல்லாம் வெடவெடவென்று உதறத்தலைப்பட்டன. அந்த

மனிதர் குப்புறவிழுந்து கிடந்தாராதலால், அவள் அவரது முகத்தைப் பார்க்கக் கூடவில்லை. அவள் விளக்கும் கையுமாக அவரண்டை நெருங்கி அவரைத் தொடாமல் தலைமுதல் கால்வரையில் உற்று நோக்கினாள். வலது காலின் ஆடுசதையில் அரைப்பாகம் மோட்டார் வண்டியினால் பிய்த்துக்கொண்டு போகப்பட்டதாகையால், அந்த இடத்தில் அப்போதும் இரத்தம் பீரிட்டடித்துக்கொண்டிருந்தது. படிகளிலும், அடுத்த தரையில் வெகுதூரம் வரையிலும் இரத்தம் குளமாகத் தேங்கிக்கொண்டிருந்தது. அதைப் பார்க்கவே, அவளது சிரம் மயங்கிச் சுழலவாரம்பித்தது. உடம்பு கிடுகிடென்று நடுங்கத் தொடங்கியது. அந்த மகா பயங்கரமான அபாய வேளையில் தான் என்ன செய்வதென்பதை அறியாமல் அந்த மின்னற்கொடியாள் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றாள். தெருவில் யாராவது மனிதர் காணப்பட்டால், அவரை உதவிக்குக் கூப்பிடலாமென்ற நினைவுண்டானதாகையால், அவள் தெருவின் இரண்டு திக்குகளிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். ஒரு மனிதராவது காணப்படவில்லை. தான் உடனே பக்கத்து வீட்டிற்கு ஓடி, யாரையாவது அழைத்து வரலாமா என்ற நினைவு அவளது மனதில் தோன்றியதானாலும், அதற்குள், அந்த மனிதருடைய பிராணன் போய்விடுமோ என்ற பீதி எழுந்ததன்றி, அதற்கு முன் பழகியறியாத மனிதரிடம் தான் போய் அந்தச் செய்தியைச் சொல்வதற்கும் அவள் ஒருவித மனக்கிலேசமடைந்தாள். ஆகவே, மறுபடியும் விளக்கை வைத்துக்கொண்டு, காலில் பட்ட அடியைத் தவிர, இன்னும் வேறு காயம் எவ்விடத்திலாவது இருக்கிறதா வென்பதை ஆராய்ச்சிசெய்து பார்த்து, வேறே காயம் இல்லையென்று நிச்சயித்துக் கொண்டவுடன், அவரது கையின் மணிக்கட்டில் தனது கையை வைத்து நாடியை ஆராய்ச்சி செய்து பார்த்தாள். நாடி துர்ப்பலமாக அடித்துக்கொண்டிருந்தது. உடனே அவள் அவரது மார்பில் கையை வைத்துப் பார்த்தாள். மார்பில் சூடு காணப்பட்டது. இருதயத்தின் அடிப்பும் புலனாயிற்று. அவர் இறக்கவில்லையென்றும், மூர்ச்சித்துக் கிடக்கிறாரென்றும், அவள் தீர்மானித்துக் கொண்டாள். தான் அதற்குமேல் வீண் காலஹரணம் செய்து தயங்கியிருப்பது கூடாதென்ற எண்ணம் அவளைத்

தூண்டியது. உடனே அவள் தனது கையிலிருந்த விளக்கைத் திண்ணையில் வைத்துவிட்டு அவரிடம் வந்து, தனது முழுபலத்தையும் வெளிப்படுத்தி குப்புற வீழ்ந்துகிடந்த மனிதரை மெதுவாக நிமிர்த்தி அவரது விலாவில் தனது இரண்டு கைகளையும் நுழைத்து அவரைத் தூக்கி வீட்டின் உட்புறத்திற்குக் கொண்டுபோக எத்தனித்தாள். அந்த மனிதர் நிரம்பவும் கனமாகத் தோன்றினராதலாலும், அவள் நிரம்பவும் மெல்லிய தேகமுடையவளாக இருந்தமையாலும், அவள் அவரை அலாக்காய்த் தூக்கிக்கொண்டு போவது சாத்தியமற்ற காரியமாயிருந்தது. ஆகவே, அவள் அவரைப் பலமாகத் தூக்கி இழுப்பதும், கொஞ்சநேரம் கீழே வைப்பதும், மறுபடி தூக்கியபடி இழுப்பதுமாய், ஐந்து நிமிஷ காலத்தில், அவரை வாசற்கதவிற்கு அப்பால் கொண்டுபோய்ச் சேர்த்தாள். அவர் மயங்கிக்கிடந்தாராதலால் அவரது உடம்பும், கைகால்களும், தலையும் துவண்டு துவண்டு தாறுமாறாக அங்குமிங்கும் விழுந்தனவாகையால், அந்த நிலைமையில், அவரை முரட்டுத்தனமாக இழுத்துக்கொண்டு மேலும் போவது அவளது மனதிற்குச் சம்மதமில்லாத செய்கையாயிருந்தது. ஆகவே, தான் அவரை மேலும் உபத்திரவித்து உள்பக்கத்திற்குக் கொண்டு போவதைவிட, நடையிலிருந்த திண்ணையின்மேல் அவரைப் படுக்க வைப்பதே உசிதமாகத் தோன்றியதாகையால், அந்த நற்குணவதி முன்னிலும் வலுவாக அவரைத் தூக்கி, ஒன்றரையடி உயரமிருந்த நடைத்திண்ணையின்மேல் அவரைப்படுக்க வைத்தாள். வாசற்படியிலிருந்த அவரை நடைத்திண்ணைக்குக் கொண்டுவந்ததில் வழி நெடுக இரத்தம் சிந்திப்போனதோடு, அவளது ஆடைகளிலும் பல இடங்களில் இரத்தம் பட்டுப்போயிற்று. படிகளிலும், அதற்கு மேல் பக்கங்களிலும், நிலைப்படியிலும் இருந்த இரத்தத்தை முதலில் துடைக்க வேண்டுமென்ற நினைவுண்டானதானலும், அவருடைய மூர்ச்சையை முதலில் தெளியவைத்துவிட்டு அதற்குமேல் மற்ற வேலையைப் பார்க்க வேண்டுமென்ற யோசனை தோன்றியதாகையால், அவள் வாசல் திண்ணையில் வைத்திருந்த விளக்கை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு உள்ளே வந்து, வாசற்கதவை மூடிவைத்துவிட்டு விரைவாக உள்ளே ஓடி, அடுப்பிலிருந்த கரிகளைப் பொறுக்கி அம்மியில் வைத்துப் பொடி செய்துகொண்டு ஓடோடியும் வந்து, அவரது காலின்

புண்ணில் ஏராளமாக வைத்து அழுத்தத் தொடங்கினாள். இரத்தம் நிற்காமல் மேன்மேலும் வெளிப்பட்டுக்கொண் டிருந்தமையால், அவள் சுமார் அரைப்படியளவுள்ள கரிப்பொடியைத் தயாரித்து அவரது காலின் காயத்தில் வைத்துக் கந்தைத்துணிகளைக் கொணர்ந்து கட்டி இரத்தம் கசியாமல் செய்தாள். அவரது உடைகளில் சில இடங்களில் இரத்தம் சிந்திக்கொண் டிருந்தமையால், அதைப்பிழிந்து விட்டு மறுபடியும் உள்ளே ஓடி, ஈரத்துணியும் சுத்த ஜலமும் எடுத்துக்கொண்டுவந்து, ஈரத்துணியால் அவரது முகத்தைத் துடைத்து விட்டு, இறுகிப்போயிருந்த அவரது பல் வரிசைகளைத் தனது கையால் பிரித்துவிட்டு, செம்பிலிருந்த தண்ணீரில் சிறிதளவு, அவரது வாய்க்குள் வார்த்தாள். ஜலம் தொண்டைக்குள் போனவுடன், தொண்டை அதை மடக்கென்று விழுங்கியது. அடுத்த நிமிஷத்தில், அவர் தமது கண்களைத் திறந்துபார்த்து விட்டு மறுபடி மூடிக் கொண்டார். அவருக்கு உயிர் இருக்கிற தென்பதையும் அவர் பிழைத்துக்கொள்வா ரென்பதையும் உணர்ந்த நமது பெண்மணி மட்டற்ற மகிழ்ச்சியும் மன எழுச்சியும் அடைந்து, மறுபடி செம்பை அவரது வாயில் வைத்து மேலும் சிறிதளவு தண்ணீரை உள்ளே வார்த்து "ஐயா! இன்னம் கொஞ்சம் ஜலம் சாப்பிடுங்கள். மயக்கம் நன்றாகத் தெளிந்துபோகும்" என்று புல்லாங்குழல் ஓசை போல ஆழ்ந்த அன்போடு கூற, அந்த மனிதர் அவளால் வார்க்கப்பட்ட நீரை உள்ளே செலுத்தியதன்றி ஐந்து நிமிஷநேரத்தில் தமது கண்களைத் திறந்துபார்த்து "இது எந்த இடம்? நான் எங்கே இருக்கிறேன்? நான் ஏன் இப்படிப் படுத்துக்கொண்டிருக்கிறேன்?" என்று வினவிய வண்ணம் மருள மருள விழித்து அந்த இடத்தின் நாற்புறங்களையும் அந்த யௌவன மடந்தையையும் மாறி மாறிப் பார்த்து ஆராய்ச்சிச்செய்ய தொடங்கினார்.

அதுகாறும் அவரை எப்படியாவது பிழைப்பிக்க வேண்டுமென்ற ஓர் நினைவிலேயே தன் முழுகவனத்தையும் செலுத்தியிருந்த நமது வடிவழகி அவர் பிழைத்துக்கொள்வார் என்ற குறி ஏற்பட்டதைக் காணவே, அவரது முகத்தையும் தேக அமைப்பும் ஒருவாறு கவனித்துப் பார்க்கத்தொடங்கினாள். அவர் நாற்பது அல்லது நாற்பத்தைந்து வயதான மத்திய பருவத்துப் புருஷரா

யிருப்பாரென்று அவள் அதற்குமுன் எண்ணியது தப்பாக முடிந்தது. விளக்கிற்கு நேரில் அவள் அவரது முகத்தையும், தேக அமைப்பையும் பார்த்ததில், அவர் சுமார் இருபத்திரண்டு வயதே அடைந்த யௌவனப்புருஷர் என்பது சந்தேகமற விளங்கியது. அவர் தந்தம் போன்ற சிவந்த உடம்பும் சாமுத்திரிகா லக்ஷணப்படி அமைந்த அங்கங்களும், வைரக்கற்களில் காணப்படும் களை ஜ்வலித்த வசீகரமான முகமும் வாய்ந்த அற்புதமான எழில் நிறைந்த கட்டழகராயிருந்ததைக் காண, அவள், அதுவரையில் அநுபவித்தறியாத ஒருவிதப் புதிய மனவெழுச்சியும், சஞ்சலமும், நாணமும் அடைந்தவளானாள்.

அவரை மேன்மேலும் பார்க்க வேண்டுமென்ற விலக்கமுடியாத ஒருவேட்கை அவளது மனதில் எழுந்து அவளை வதைத்ததானாலும், அவள் கூச்சமடைந்து கீழே குனிந்து கொண்டாள். அவரது தேக அமைப்பு எப்படி உயர்ந்த நிலைமையையும், செல்வத்தையும், செழுமையையும் தோற்றுவித்ததோ, அதற்கிணங்கவே அவர் மீதிருந்த ஆடையாபரணங்களும் சிறந்தவைகளாக இருந்தன. அவரது இடையில் ஒருசாண் அகலம் ஜரிகைக்கரையுள்ள பட்டு வேஷ்டி யிருந்தது. உடம்பில் விலையுயர்ந்த சில்க் ஷர்ட் அணியப் பெற்றிருந்தது. தோளின்மேல் ஜரிகை உருமாலை ஒன்று காணப்பட்டது. அவரது செவிகளில் சுமார் 2000 ரூபாய் பெறத்தக்க வைரக் கடுக்கன்கள் நட்சத்திரச் சுடர்கள் போல ஜ்வலித்துக் கொண்டிருந்தன. கழுத்தில் ஒற்றை உருத்திராட்சமுள்ள கல்லிழைத்த தங்கக் கொடி, கையில் தங்கக் காப்பு கொலுசுகள் மோதிரங்கள் முதலிய ஆபரணங்கள் ஏராளமாகக் காணப்பட்டன. அவரது காலில் விலையுயர்ந்த பூட்ஸுகள் நாடாவினால் கட்டப்பட்டிருந்தன. அவரது இயற்கையழகையும், செயற்கைப் பெருமையையும் அப்போதே கவனித்துப் பார்த்த நமது வைதேகி அவரது விஷயத்தில் முன்னிலும் ஆயிரமடங்கு அதிகரித்த இரக்கமும் உருக்கமும் காண்பித்தவளாய் நாணிக்கோணி நின்றாள். அவர் கேட்ட கேள்விக்கு மறுமொழி கூற அவள் வெட்கினாளானாலும், அந்த அபாயவேளையில், தான் அவரோடு பேசியே தீரவேண்டுமென்ற நினைவைக்கொண்டவளாய் "இது ஆலங்காத்தா பிள்ளை தெருவிலுள்ள ஒருவீடு. நீங்கள் இந்த வீட்டு வாசலில் வந்தபோது

மோட்டார் வண்டி ஓடிவந்து உங்கள்மேல் மோதி உங்களுடைய கால் சதையைப் பிய்த்துக்கொண்டு போய்விட்டது. நீங்கள் உடனே மயங்கிக் கீழே விழுந்துவிட்டீர்கள். நான் உங்களை எடுத்துவந்து வீட்டு நடைத்திண்ணையில் படுக்கவைத்திருக்கிறேன்.'' என்றாள்.

அப்போது பாதி மயக்கத்தில் கண்களை மூடிக்கொண்டிருந்த அந்த யௌவனப்புருஷருக்கு, அவளது சொற்கள் கிணற்றிற்குள்ளிருந்து பேசுவதுபோலப்பட்டன. அவர் தமது கண்களை மூடிய படியே பேசத்தொடங்கி "இந்த வீட்டில் வேறே ஆண்பிள்ளை யாருமில்லையா ?'' என்று குளறுபிடியாகப் பேசினார்.

அதைக் கேட்ட பெண்மணி "இந்த வீட்டில் ஆண்பிள்ளை யாருமில்லை. நானும் என் பாட்டியுந்தான் இங்கே இருப்பவர்கள். என் பாட்டியை ஒரு காரணமாக நான் தேனாம்பேட்டைக்கு அனுப்பி இருக்கிறேன். ஏன் ? உங்களுக்கு உடம்பு இப்போது எப்படி இருக்கிறது ? ஏதாவது வேண்டுமா ?'' என்றாள்.

அந்த யௌவனப் புருஷரது உடம்பிலிருந்த இரத்தத்தில் பெரும் பாகமும் வெளியில் போய்விட்டமையால், அவரது உடம்பும் மனமும் முற்றிலும் பலஹீனப்பட்டுப் போனதன்றி, அவரது அறிவும் குழம்பிப்போயிருந்தது. அந்தப் பெண்மணி செய்த சிகிச்சையினால் அவரது மயக்கம் சிறிதளவு தெளிந்ததாயினும் மறுபடியும் மயக்கம் அதிகரிக்க ஆரம்பித்தது. அவர் தணிவான குரலில் குளறலாகப்பேசத் தொடங்கி "அம்மா ! என் உயிர் இன்னம் கொஞ்ச நேரத்தில் போய்விடும்போலிருக்கிறது. யாராவது ஒரு வைத்தியரை உடனே அழைத்துவந்தாலன்றி நான் பிழைப்பது சந்தேகம்'' என்றார்.

அதைக்கேட்ட மங்கை திடுக்கிட்டு பெரிதும் கலக்கமும் திகிலும் அடைந்து "ஐயோ ! தெய்வமே ! இது என்ன சோதனையோ தெரியவில்லையே ! இவரைப் பார்த்தால் யாரோ பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைபோல இருக்கிறார் ; நிரம்பவும் பாலியப்பருவமுடையவராகவுமிருக்கிறார்; இவர் இறந்துபோய் விடுவேனென்கிறாரே ! இந்த அபாய வேளையில், வேறே யாருமில்லையே ! இவருக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்துவிட்டால், ஒருவேளை போலிசார் என்னைப்பிடித்து உபத்திர

விப்பார்களோ என்னவோ தெரியவில்லையே?" என்று தனது கைகளைப் பிசைந்துகொண்டு வாய்விட்டு மிகுந்த வேதனையோடு பிரலாபித்தவளாய், அவருக்கருகில் நெருங்கி அன்பாகவும் மிருதுவாகவும் பேசத்தொடங்கி "ஐயா! உங்களுடைய வீடு எங்கே இருக்கிறது? தெருவின் பெயர், வீட்டின் இலக்கம் இவைகளைச் சொல்லுங்கள்" என்று நிரம்பவும் பதறியவளாய்க் கேட்க, அதற்கு ஐந்து நிமிஷ காலம் வரையில் மறுமொழியே கிடைக்கவில்லை. பெண்மணி விவரிக்க வொண்ணாத திகிலும் நடுக்கமுமடைந்து மறுபடியும் பேசத் தொடங்கி "ஐயா! ஐயா! உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? உங்களுடைய விலாசம் ஏது?" என்று நயமாக வற்புறுத்திக் கேட்க, அவனது உதடுகள் மெதுவாக அசைந்தன. "என் வீடு சிந்தாதிரிப் பேட்டையில்..............." என்று கூறி, விஷயம் முழுதையும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டு அப்படியே மௌனத்தில் ஆழ்ந்து போய்விட்டார்.

அதைக் கண்ட வைதேகி அவர் ஒருவேளை இறந்துபோய் விட்டாரோ என்று சந்தேகித்தவளாய் முற்றிலும் பதறிப்போய்த் தனது கைகளைப் பிசைந்துகொண்டு "ஐயோ! நான் என்ன செய்யப் போகிறேன்! பேச ஆரம்பித்தவர் அப்படியே ஓய்ந்து பேசாமல் இருந்துவிட்டாரே! உயிர் இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லையே!" என்று வாய்விட்டுக் கூறியவண்ணம் அவரைப் பார்த்து "ஐயா! ஐயா!" என்று முன்னிலும் பலமாக ஓங்கிக் கூப்பிட்டுப் பார்த்தாள். மறுமொழி கிடைக்கவில்லை. அவள் அவரது மார்பில் கையை வைத்துப்பார்த்தாள்; நாடியைத் தொட்டுப்பார்த்தாள். உயிர் இருந்த குறியே காணப்படவில்லை. அவள் முற்றிலும் பிரமித்துப் போய் அபாரமான கிலிகொண்டு தான் என்னசெய்வதென்பதை உணராமல், நெருப்புத் தணலின்மேல் நிற்பவள்போலத் தத்தளித்து "ஐயோ! தெய்வமே! இது என்ன சோதனையோ தெரியவில்லையே! ஸ்வாமீ! பார்த்தஸாரதிப்பெருமாளே! கொஞ்சநேரத்திற்கு முன் எனக்கு ஏதாவது நல்லவழி காட்ட வேண்டுமென்று நான் வேண்டிக் கொண்டதற்கு, இப்படிப்பட்ட பரம சங்கடமான நிலைமையையா எனக்கு உண்டாக்கி வைக்கவேண்டும். நான் இப்போது என்ன செய்கிறதென்பது தெரியவில்லையே! இவருக்கு உயிர் இருக்கிறதோ

இல்லையோ என்பதே சந்தேகமாயிருக்கிறதே! இவருடைய வீடு சிந்தாதிரிப்பேட்டையில் இருக்கிறதென்று சொன்னவர் தெரு முதலிய மற்ற விவரத்தைச் சொல்லுமுன் இப்படி ஓய்ந்துபோய் விட்டாரோ! வீட்டின் விலாஸம் தெரிந்தாலாவது, நான் உடனே ஒரு வண்டியைப் பேசி, அதில் இவரைப் படுக்கவைத்து அனுப்ப லாம். அதற்கும் வழி இல்லாமல் போய்விட்டதே. இனி நான் சும்மா இருப்பது பிசகு. பக்கத்துத் தெருவில் ஒரு டாக்டர் இருக் கிறாரல்லவா! அவரிடமாவது நான் உடனே போய், இந்தச் சங்கதியை யெல்லாம் சொல்லி அழைத்துக்கொண்டு வருகிறேன்.'' என்று தனக்குள் நினைத்தவளாய் வீட்டிற்குள் ஓடி அங்கிருந்த ஒரு பூட்டை எடுத்துவந்து வெளிக்கதவை மூடிப் பூட்டிக்கொண்டு விரைவாக நடந்து அந்தத் தெருவைக் கடந்து அதற்குப் பக்கத்திலிருந்த இன் னொரு தெருவை யடைந்தாள். அவள் அதற்குமுன் இரவில் தனி யாக வெளியில் போனவளேயன்றாதலால், அவளது உடம்பு அடிக் கடி திடீர்திடீரென்று தூக்கிப்போட்டது. தனது வீட்டில் அலங் கோலமாகக் கிடந்த யௌவனப் புருஷரது பயங்கரமான நிலைமையை நினைக்க நினைக்க, அவளது அறிவு முற்றிலும் குழம்பித் தடுமாறி யது. அந்த நிலைமையில் அவள் ஓட்டமும் நடையுமாகச் சென்று எதிரில் வந்த சில மனிதரோடு சம்பாஷித்து, டாக்டரின் வீடு இருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டு அங்கே போய்ச் சேர்ந்தாள். சேர்ந்தவள் டாக்டரைக் கண்டு, தான் யார் என்பதையும், தான் இன்ன காரியமாக வந்ததென்பதையும் தெரிவித்தாள். அந்த டாக் டரின் பெயர் லக்ஷ்மீகாந்தம் நாயுடு என்பது. அவர் அத்தகைய மங்கள கரமான பெயரை வைத்துக்கொண்டிருந்தாரானாலும், அவரிடம் லக்ஷ்மிவிலாஸமென்பது முழுப்பூஜ்யமாக இருந்தது. அவர் முன் கோபமும் கடுகடுத்த முகமும் உடையவராதலால், அவரிடம் ஜனங் கள் அதிகமாகப் போகிறதே இல்லை. நிரம்பவும் அபாயகரமான சந்தர்ப்பம் ஏற்பட்டு, வேறு டாக்டர் கிடையாது போகும் பட்சத் தில், ஜனங்கள் அவரை அழைப்பார்கள். அதனால், அவர் தமது தரித் திரக்கொடுமையை சகிக்கமாட்டாதவராய் இருந்தவராதலால், எவ ரைக்காணினும், அவரது மனதில் பெருத்த பகைமையும் குரோத மும் கடுகடுப்பும் அபாரமாகத் தோன்றுவது வழக்கம். அவர்

உயிர்போகும் சமயத்திலும் தமக்குச் சேரவேண்டிய பணத்தையும் மருந்தின் கிரயத்தையும் முன்னுகப் பெற்றுக்கொண்டே வெளியில் கிளம்புவது வழக்கமாதலால், நமது வைதேகி சொன்ன வரலாற்றைக் கேட்ட டாக்டர் "சரி; நீ சொல்வதெல்லாம் சரிதான். அடி பட்டுக் கிடக்கும் மனிதர் இன்னுரென்பது தெரியவில்லை. உனக்கும் அவருக்கும் எவ்வித பாத்தியமுமில்லை யென்கிருய். அவர் பிழைத்துக் கொண்டால், எனக்குச் சேரவேண்டிய பணத்தை அவர் கொடுப்பார்; இறந்துபோய் விடுவாராஞல், அதன்பிறகு, நீ பணம் கொடுக்க மறு த்து விட்டால், நான் யாரைக் கேட்கிறது. அதெல்லாம் உதவாது. கையிலே காசு வாயிலே தோசை என்கிறபடிதான் நான் எப்போ தும் வைத்தியம் செய்கிறது. அந்த மனிதருடைய காலில் மருந்து வைத்துக் கட்டி உள்ளுக்கும் மருந்து கொடுக்கவேண்டும். அதற்கு ரூபாய் ஐந்து பிடிக்கும். நான் உங்கள் வீட்டுக்கு வருவதற்கு ரூபாய் இரண்டு. ஆக ரூபாய் ஏழையும் நீ இப்போது கொடுத்தால், நான் உடனே புறப்பட்டு வந்து வைத்தியம் செய்யத் தடையில்லை." என்று கண்டிப்பாகவும் நயமாகவும் கூறினுர். டாக்டருக்கு தான்பணம் கொடுக்க வேண்டியிருக்கும் என்ற நினைவு அப்போதே வைதேகி யின் மனதில் உண்டாயிற்று. அவளது வீட்டுப் பணச்செலவு களையெல்லாம் கூனற்கிழவியே செய்துவந்தாளாகையால், வைதேகி பணமென்பதையே கண்ணுல் பார்த்தவளன்று. அதுவுமன்றி, கூனற்கிழவி வீட்டில் எவ்விடத்தில் பணம் வைத்திருந்தாள் என் பதையாவது, அப்போது, வீட்டில் ஏதாவது பணம் இருந்ததா இல்லையா என்பதையாவது அறியாமலிருந்தவளாதலால், டாக்டர் கேட்ட ஏழு ரூபாய்க்குத் தான் எங்கே போகிறது என்ற பெருத்த கவலை எழுந்து வதைக்கத் தொடங்கியது. கிழவி எப்போதும் காலணுவிற்கும் அரையணுவிற்கும் தரித்திரப்பட்டு அடுத்த வீட் டிலும், எதிர்த்த வீட்டிலும் கடன் வாங்கியதை அவள் உணர்ந் திருந்தாளாதலால், அவ்வளவு பெரிய தொகை தனது வீட்டில் அப்போது இராதென்றே அவள் நிச்சயித்துக் கொண்டாள். மோட் டாரினுல் அடிபட்டு வீழ்ந்து கிடக்கும் யௌவனப் புருஷரது சட் டைப்பையில் ஒருவேளை ஏதாவது பணம் இருக்கலாம் என்ற ஒரு நினைவு தோன்றியதானுலும், அவர் இருந்த விகாரமான நிலைமையில்,

தான் அவரது சட்டைப் பையிலிருந்து, அவரது அநுமதியின்றி பணத்தை எடுப்பது ஒழுங்கான காரியமல்லவென்று அவள் நினைத்தாள். அதற்குமேல் தான் என்ன செய்கிறது என்பதைப்பற்றி அவள் யோசித்து யோசித்துப்பார்த்தாள். அவளது மனதில் ஒன்றும் தோன்றவில்லை. பணம் இல்லாமையைக் கருதி, நோயாளியைப் புறக்கணித்து விடுவதற்கும், அவளது தயாள மனம் இடந்தரவில்லை. ஆகவே, அவளது மனதில் ஒரு யோசனை தோன்றியது. அவள் டாக்டரைப்பார்த்து "ஐயா! இப்போது என் கையில் பணம் கிடையாது. அடிபட்டுக்கிடப்பவரிடம் பணம் இருக்கிறதோ இல்லையோ. அதுவும் தெரியவில்லை. அவரிடத்தில் பணம் இருந்தாலும், அதை நான் எடுப்பது மரியாதையல்ல. இதோ என் கையில் ஒரு தங்க வளையல் இருக்கிறது. ஒரு கை வளையல் ஒரு பவுனுக்குச் செய்தது. இதில் ஒரு வளையலை எடுத்து உங்களிடம் நான் ஈடாக வைக்கிறேன். நீங்கள் வந்து அவருக்கு ஆகவேண்டியதைச் செய்யுங்கள். நான் பிற்பாடு பணம் கொடுத்து இந்த வளையலை வாங்கிக்கொள்ளுகிறேன். இதோ தருகிறேன். வாங்கிக்கொண்டு புறப்பட்டு சீக்கிரமாக வாருங்கள்" என்று பணிவாகக் கூறித் தனது இடதுகை வளையலைக் கழற்ற எத்தனித்தாள். அதை யுணர்ந்த டாக்டர் பெரிதும் கோபம் கொண்டவராய் அவளை நோக்கி "நகையை அடமானம் வைத்துக்கொள்ள, நானென்ன மார்வாடி என்று நினைத்துக்கொண்டாயா? என்னைப் போன்ற கண்ணியமான மனிதரிடத்திலெல்லாம் இப்படிப்பட்ட தகாத பிரஸ்தாபத்தைச் செய்யக்கூடாதென்பதைக் கூட நீ தெரிந்துகொள்ளாமல் சுத்த அநாகரிகம் நிறைந்தவளாயிருக்கிறாயே! எனக்கு உன் நகையும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். நீ வேறே எந்த டாக்டரிடத்திற்காவதுபோ" என்று நிரம்பவும் பதற்றமாகக் கடிந்து பேசினார். அதைக் கேட்ட பெண்மணி முற்றிலும் குழப்பமும் சஞ்சலமு மடைந்தவளாய் "ஐயா! நான் ஜீவகாருண்யமொன்றையே உத்தேசித்து இங்கே வந்தேன். எங்கள் வீட்டு வாசலில் அந்த மனிதர் அடிபட்டு விழாமல் உங்கள் வீட்டு வாசலில் வீழ்ந்திருந்தால், அவருக்கு ஆகவேண்டிய சிகிச்சைகளை நீங்கள் செய்யமாட்டீர்களா? அநாதரவாக அபாயத்தில் ஒரு மனிதர் அகப்பட்டுக் கொண்டால், அவரைக் காப்பாற்றும் பொறுப்பு சகலமான மனிதரையும் சேர்ந்த

தல்லவா. உங்களுடைய மனசில் கொஞ்சமாவது ஜீவகாருண்ய உணர்ச்சி உண்டாகவில்லையா? இந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் இனு மாகவே வந்து பார்க்கக் கடமைப்பட் டிருக்கிறீர்கள். அதையும் விட்டு, நான் நகையை ஈடாக வைப்பதாகச் சொல்வதற்கும் இணங்க மாட்டேனென்கிறீர்களே! என் வீட்டில் இப்போது வேறே மனிதர் யாருமில்லை. நானோ அறியாத சிறிய பெண். இந்த இரவில் நான் பணத்திற்கு இனி எங்கே போகிறது? என் கண்ணிற்கெதிரில் துடி துடித்து உயிரைவிடும், நம்மைப்போன்ற ஓர் ஆத்மாவுக்கு நம்மா லியன்ற உதவி செய்யாவிட்டால், நமக்கு நல்ல கதி கிடைக்குமா? ஐயா! கோபித்துக்கொள்ளவேண்டாம். நீங்கள் தயவுசெய்து இந்த வளையலை வாங்கிக்கொண்டு புறப்பட்டு வாருங்கள். இதை நீங்கள் ஈடாக வைத்துக்கொள்ளவேண்டாம்; இதை நீங்களே பணத்திற்கு பதிலாக எடுத்துக்கொள்ளுங்கள். இது இப்போது குறைந்தது பன்னிரண்டு ரூபாய் பெறும். நீங்கள் கேட்பதைவிட ஐந்து ரூபாய் அதிகமாகவே இருக்கிறது" என்று பணிவாகக் கூறினாள்.

அதைக் கேட்ட டாக்டர் சிறிதும் இரக்கமே கொள்ளாதவராய்க் கண்டிப்பாய்ப் பேசத்தொடங்கி, "நான்தான் ஒரே முடிவாகச் சொல்லிவிட்டேனே. நீ மறுபடி மறுபடி ஆயிரந்தரம் சொல்வதில் உபயோகமொன்றுமில்லை. நீ தாசி வகுப்பைச் சேர்ந்தவளென்று சொல்லுகிறாய். அவருக்கும் உனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை யானால், நீ இவ்வளவு தூரம் பாடுபட்டு இந்த இரவில் இவ்வளவு தூரம் தனியாக வந்திருக்கமாட்டாயென்பது நிச்சயம். அப்படி இருக்க, உன்னுடைய கதையை நான் நம்பக்கூடியவனல்ல. இந்த வளையல் ஒருவேளை கில்ட் வளையலாக இருக்கலாம். இந்த உபத்திரவ மெல்லாம் எனக்கு எதற்காக? இதோ பக்கத்துத் தெருவில் ஒரு மார்வாடி இருக்கிறான். அவனிடம் நீ போய் இந்தக் காப்பைக் கொடு. அவன் உடனே பணம் கொடுப்பான். அதை வாங்கிக் கொண்டு நீ இங்கே வந்து சேர். அடுத்த க்ஷணத்தில் நான் புறப் பட்டு வருகிறேன்." என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

அதைக் கேட்ட பெண்மணி முற்றிலும் குழம்பித் தயங்கி "ஐயா! இந்த அபாயகாலத்தில், நான் தெருத் தெருவாய் அலைந்து

கொண்டிருந்தால், அதற்குள் அவருடைய உயிர் நீங்கிவிட்டால், அதன்பிறகு, நான் பட்டபாடு வீணாய்ப் போய்விடுமே." என்றாள்.

டாக்டர் இனிமையாகப் புன்னகை செய்தவராய் "அவருடைய உயிரைப் பற்றி நீ கொஞ்சமும் கவலைப்படாதே. உயிர்போயிருந் தால்கூட அதைத் திருப்புவதற்கு என்னிடம் தக்க மருந்திருக் கிறது. நீ பணத்தை மாத்திரம் எப்படியாவது சேகரித்துக் கொண்டு வந்துவிட்டால், அவர் பிழைத்துப்போன மாதிரியே" என்றார்.

வைதேகி "ஐயா! பஞ்சத்தாண்டியோ பரம்பரை யாண்டியோ என்பார்கள். நான் இதற்குமுன் வீட்டைவிட்டு வெளியில் வந்தவளு மல்ல; மார்வாடி முதலியோருடைய வீட்டுக்குப் போய்ப் பழகியவளு மல்ல. எனக்கு அந்த மார்வாடியையும் தெரியாது. இது சூதுநகை யென்று நீங்கள் பயந்தால், என் காதிலிருக்கும் கம்மலையாவது ஈடாக வைக்கிறேன். எப்படியாவது நீங்கள் தயவு செய்யுங்கள்" என்றாள்.

கல்லிலும் கடிய மனதுடைய அந்த டாக்டர் அதற்கும் இரங் காமல் "பெண்ணே! வீணாக நீ என் காலத்தைப் போக்குகிறாய்! உன் கம்மல் மாத்திரம் சூது கம்மலாக இருக்காதென்பதை நான் எப்படி நிச்சயிக்கிறது. அதெல்லாம் சரிப்படாது. நீ மார்வாடி வீட்டுக்கே போ. நகையை வைத்துக்கொண்டு பணம் கொடுக்கிறதற்கு முன்பின் பழக்கம் வேண்டுமென்பதில்லை. நகைக்காகப் பணம் கொடுக் கிறானா? பழக்கத்திற்காகப் பணங்கொடுக்கிறானா? யார் போய்க் கேட் டாலும், சரியான ஈடிருந்தால், அவன் தானே பணம் கொடுக்கிறான். அதைப்பற்றி உனக்கு யோசனையே வேண்டாம். நீ இதுவரையில் வீட்டைவிட்டு வெளியில் வந்ததே இல்லையென்கிறாயே. இப்போது ஏன் வந்தாய்? புண்ணியம் சம்பாதிக்க வேண்டுமென்ற நினைவோடு தானே வந்தாய். சும்மா கிடைக்குமோ சோணாசலன்பாதம் என்பார் கள். அதைப்போல, புண்ணியம் சுலபத்தில் கிடைத்து விடுமோ? பலவிதத்தில் கஷ்டப்பட்டு, செய்யாத காரியத்தையெல்லாம் செய்தால் தான் புண்ணியம் பலிதமாகும். செய்ய ஆரம்பித்த காரியத்தை கடைசிவரையில் செய்யவேண்டுமென்பது உனக்குத் தெரியாதா?" என்று நிர்த்தாக்ஷண்யமாகக் கண்டித்துக் கூறிவிட்டுத் தமது முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டார்.

MS 12

அவரது ஈவிரக்க மற்ற கொடிய சொற்களைக் கேட்ட மடமங்கை தான் அதற்குமேல் அவ்விடத்தில் நிற்பதில் பயனில்லை யென்று உணர்ந்தாளேனும், அதற்குமேல் தான் என்ன செய்கிறதென்பதை நிச்சயிக்கமாட்டாதவளாய்ப் பெரிதும் கலங்கிக் குழம்பி, அவ்விடத்தை விட்டு வெளியில் வந்து தெருவையடைந்தாள்.

அடைந்தவள், தான் அதற்குமேல் என்னசெய்வதென்பதை நிச்சயிக்கமாட்டாதவளாய்க் குழம்பிப் போய்ச் சிறிது நேரம் அப்படியே தெருவில் நின்றுகொண் டிருந்தாள். தான் எப்படியாவது டாக்டரை அழைத்துக்கொண்டு போவதே உசிதமான காரியமன்றி, தான் மாத்திரம் திரும்பிப்போவதில் உபயோக மொன்றுமில்லையென்றும், தான் மாத்திரம் போனால், நிரம்பவும் அபாயகரமான நிலைமையில் இருக்கும் மனிதரது உயிரை மீட்கத்தக்க காரியம் எதையும் செய்ய அறியாமல் தான் தனியாக இருந்து சகிக்கவொண்ணாத கவலையும் திகிலும் அடைந்தபடியே வருந்தித் தவித்திருக்க நேருமென்றும் நினைத்தவளாய் நமது வைதேகி அடுத்த தெருவிலிருப்பதாக டாக்டர் குறித்த மார்வாடியிடம் தான் போய்த் தனது ஆபரணத்தில் எதையாகிலும் அவனிடம் அடமானம் வைத்து பத்து ரூபாய் பணம் வாங்கிக்கொண்டு வந்தால், டாக்டருக்குக் கொடுக்கவேண்டியது போக, மிகுதியிருப்பதை வண்டி முதலிய இதர செலவுகளுக்கு உபயோகித்துக் கொள்ளலாமென்று முடிவு செய்துகொண்டு அவ்விடத்தை விட்டு நடந்து வழியில் எதிர்ப்பட்ட மனிதர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு மார்வாடி இருந்த இடத்தை யடைந்தாள்.

அவன் இருந்த தெருவும், ஆலங்காத்தா பிள்ளை தெருவைப் போல, ஒதுப்புரமான ஒரு சந்தாதலால், அவ்விடத்திலும், அப்போது ஜனங்களின் நடமாட்டம் அவ்வளவாகக் காணப்படவில்லை. அப்போது இரவு சுமார் ஒன்பது மணி சமயமாய்விட்டதாகையால் ஜனங்களெல்லோரும் தத்தம் வீடுகளின் கதவை மூடித் தாளிட்டுக் கொண்டு உள்புறத்தில் தமது சமயல், சாப்பாடு, சயனம் முதலிய காரியங்களைச் செய்துகொண்டிருந்தனர். அந்தத் தெருவிலிருந்த மார்வாடியின் ஜாகை இரண்டு பாகமாய்ப் பிரித்துக்கட்டப்பட்டிருந்தது. அவன் குடியிருப்பதற்கு உபயோகிக்கப்பட்ட பாகம் ஒரு

182820

சாதாரண வீடுபோல இருந்தது. அதன் வெளிக்கதவு உட்புறத்தில் எப்போதும் தாளிடப்பெற்றிருந்தது. அந்த வீட்டின் காமரா உள் கடைபோல முன் பக்கத்தில் திறந்துவிடப்பட்டு, இரவில் பலகைகளால் மூடப்படுவதாய் அமைக்கப்பட் டிருந்தது. அந்தக் கடையின் தரை முழுதும் பெருத்த பஞ்சுமெத்தை பரப்பப்பெற்று, சுவரோரமாக நாலைந்து திண்டுகள் சார்த்திவைக்கப் பெற்றிருந்தது. அந்தக் கடையின் சொந்தக்காரன் மாத்திரம் அப்போது ஒரு திண்டில் சாய்ந்து கொண்டு, கடையை மூடும்பொருட்டு அன்றைய வரவுசெலவு கணக்குகளைப் பார்த்துக்கொண் டிருந்தான். அவனுக்கெதிரில் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு சிறிய விளக்கு முணுக்கு முணுக்கென்று எரிந்துகொண்டிருந்தது. அந்தக் கடைவாசலை யடைந்த பெண்மணி தான் துணிந்து அவனிடம் சென்று விஷயத்தை எப்படி வெளியிடுவது என்பதை அறியாதவளாய் மிகுந்த கிலேசமடைந்து தெரு வழியாகவே அங்குமிங்கும் இரண்டு மூன்று தடவை போய் வந்தாள். மார்வாடி தனது கவனம் முழுதையும் கணக்குப் புஸ்தகத்திலேயே செலுத்தியிருந்தானுகையால், அவனே தன்னைப் பார்த்து, வந்த காரியமென்னவென்று கேட்பானென்ற நம்பிக்கை இல்லாமல் போயிற்று. ஆகவே, வைதேகி தனது மனதை திடப்படுத்திக்கொண்டு, துணிந்து கடையின் பக்கத்தில் மெதுவாகப் போய் நின்றாள்.

முதலில் பத்து நிமிஷநேரம் வரையில் மார்வாடி அவள் வந்ததை உணராமலேயே இருந்து, கணக்குப் புஸ்தகத்தைக் கீழே வைத்த சமயத்தில் அவளைப் பார்த்தான். பார்த்தவன், அவ்வளவு அற்புதமான அழகு வாய்ந்து, பெரிய மனிதரின் வீட்டுப்பெண்ணைப் போலிருந்த அந்த யௌவன மடந்தை தன்னிடம் கடன்வாங்க வந்திருப்பாளா என்ற சந்தேகமும் வியப்பும் தோன்றின. அதுவுமன்றி, அவன் முப்பத்தைந்து வயதடைந்தும் கலியாணம் ஆகாமையால், பிரம்மசாரி நிலைமையிலேயே இருந்தவனுகையால், மகாராஜனுடைய அந்தப்புரத்திலிருக்கத் தகுந்த ரதிதேவிபோலத் தோன்றிய அந்த ஒப்புயர்வற்ற வடிவழகியைத் தனிமையில் காணவே, அவனது மனதில் பிரமாதமான காமவிகாரம் தோன்றி அவனது மனதையும், அறிவையும் மயக்கியது. திடீரென்று ஒரு பெருத்த பேய் ஒருவனை அறைந்தால், அவன் எப்படி இருப்பானே, அதுபோல அந்த மார்

வாடி விவரிக்க முடியாத பிரமிப்பும் குழப்பமும் சஞ்சலமும் அடைந்து, இரண்டொரு நிமிஷநேரம் இன்னது செய்வதென்பதை அறியாமல் தத்தளித்த பிறகு அவளை நோக்கி அன்பாகவும் மரியாதை யாகவும் பேசத்தொடங்கி "யாரம்மா நீ? என்ன காரியமாக வந்தாய்?" என்று வினவினான்.

அதைக் கேட்ட பெண்மணி நாணிக்குனிந்தபடி மறுமொழி கூறத்தொடங்கி "ஐயா! நீங்கள் நகையை அடமானம் வைத்துக் கொண்டு பணம் கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். எனக்கு அவசரமாகப் பத்துரூபாய் பணம் வேண்டும். என்னுடைய கையி லுள்ள தங்க வளையல்களில் ஒன்றைக் கழற்றிவைக்கிறேன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பவுன் நிறையுள்ளது. ஒன்றைவைத்துக் கொண்டு எனக்கு அவசரமாகப் பத்துரூபாய் கொடுங்கள். இரண் டொரு தினத்தில் நான் முதலும் வட்டியுமாகக் கொடுத்துவிட்டு நகையை வாங்கிக்கொள்ளுகிறேன்." என்று கூறினாள். மார்வாடி ஏளனமாக நகைத்து "ஒரு பவுனுக்குச்செய்த காப்பை வைத்துக் கொண்டு பத்து ரூபாயா கொடுக்கவேண்டும்? ஒரு பவுனின் விலை ரூ. 13—8—0 ஆகிறது. தேய்வுபோக இப்போது இதன் கிரயமே பத்து ரூபாய் இருக்குமோ என்னவோ. இதை வைத்துக்கொண்டு யார் பத்து ரூபாய் கொடுப்பார்கள்? இரண்டு கை வளையல்களை வைத் தால்கூட உனக்குப் பத்துரூபாய் யாரும் கொடுக்கமாட்டார்களே! இருக்கட்டும். நான் நிறுத்துப்பார்த்துச் சொல்லுகிறேன். நீ இரண்டு கை வளையல்களையும் கழற்று, பார்க்கலாம்" என்று நயமாகக்கூறினான்.

வைதேகி "நாங்கள் வாங்கியபோது ஒருபவுனின் விலை ரூ. 18 ஆக இருந்தது. அதனால் அப்படிக் கேட்டேன். நான் இரண்டு வளையல்களையுமே கழற்றித் தருகிறேன். இரண்டும் பத்து ரூபாய் பெறுமலாபோகும். இரண்டையுமே வைத்துக்கொண்டு பத்து ரூபாய் கொடுங்கள்." என்று கூறிய வண்ணம் தனது இரண்டு கைகளிலு மிருந்து வளையல்களிரண்டையும் கழற்றி அவனுக்கெதிரில் வைத் தாள். உடனே மார்வாடி நிரம்பவும் நிதானமாகத் தனது ஆசனத்தை விட்டு எழுந்து வந்து வளையல்களை எடுத்துக் கொண்டுபோய்த் தானிருந்த திண்டின் பக்கத்தில் வைத்துவிட்டு, அவைகளை நிறுத்

துப்பார்ப்பதற்கு திராசைத் தேட ஆரம்பித்தான். பக்கத்திலிருந்த இரும்புப்பெட்டியின் மேல்பக்கம், கீழ்ப்பக்கம் முதலிய பல இடங்களிலும் தேடிப்பார்ப்பவன் போல அவன் சிறிதுநேரம் பாசாங்கு செய்தவண்ணம், தனது கடைக்கண்பார்வையை அந்த வடிவழகியின் மீது செலுத்தி அதனுல் அவனது மனதில் ஊறிய இன்பத்தை அநுபவித்தபடியே அவளோடு நயமாகப் பேசத்தொடங்கி "இங்கே தானே திராசை வைத்தேன். அது போன இடம் தெரியவில்லையே! எப்போது பார்த்தாலும், காலிலும், கையிலும், கண்களிலும் பட்டுக் கொண்டிருக்கும் திராசு நம்முடைய அவசரத்தில் இப்படி மாயமாக மறைந்து போய்விட்டதே!" என்று தனக்குத்தானே வாய்விட்டுப் பேசி, அப்போதே நினைத்துக் கொண்டவன்போல "ஓகோ! சரி! சரி! இப்போதுதான் ஞாபகம் உண்டாகிறது. நான் இந்தக் கணக்குப் புஸ்தகத்தை வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தபோது, பக்கத்துத் தெருவிலுள்ள என்னுடைய பந்து ஒருவர் வந்து, தம்முடைய திராசு அறுந்து போய்விட்டதென்றும், ஏதோ ஒரு நகையை நிறுக்கவேண்டு மென்றும் சொல்லிவிட்டு என்கடைத் திராசை எடுத்துக்கொண்டு போனுர்; உடனே கொண்டுவந்து கொடுப்பதாகச் சொல்லிவிட்டுப் போனுர். ஆய்விட்டது; வந்து விடுவார். கொஞ்சநேரம் பொறுத்துக்கொள். உன்னைப் பார்த்தால் தக்க பெரிய மனிதர்வீட்டுப் பெண் போல இருக்கிறது. நீ தெருவில் நிற்பது சரியல்ல. போகிறவர் வருகிறவர்களெல்லோரும் உன்னை உற்றுப்பார்ப்பார்கள். நீ இப்படியே ஏறி, கடைக்குள் போய் உட்கார்ந்துகொள். பின்பக்கத்தில் எங்கள் வீடு இருக்கிறது. என் சம்சாரம் முதலிய பெண்பிள்ளைகள் உள்ளே இருக்கிறுர்கள். நீ அவர்களோடு கால்நாழிகை சாவகாசம் பேசிக்கொண்டிரு" என்று அன்பாகவும் மரியாதையாகவும் கூறினுன்.

அதைக் கேட்ட வைதேகி "அடாடா! என்ன பொல்லாத வேளை இது. நான் எங்கே போனுலும் காரியம் ஆகமாட்டே னென்கிறதே. ஏதாவது ஓர் இடையூறு வந்து குறுக்கிடுகிறதே! இந்நேரம் அந்த மனிதர் என்ன நிலைமையிலிருக்கிருரோ தெரியவில்லையே!" என்று தனக்குத்தானே எண்ணமிட்டு மிகுந்த சஞ்சலமும் வேதனையும் அடைந்தவளாய் மார்வாடியை நோக்கி "ஐயா! நான் நிரம்பவும் அவசரமாக வீட்டிற்குப் போக

வேண்டும். நான் இங்கேயே நிற்கிறேன். தெருவில் போகிறவர்கள் என்னைப் பார்த்தால் பார்த்துவிட்டுப் போகிறார்கள். நான் தப்பானகாரியம் எதுவும் செய்யவில்லையே'' என்று கூறினாள். அதைக் கேட்ட மார்வாடி, தான் அதற்குமேல் வற்புறுத்தினால், அவள் சந்தேகங் கொண்டு போய்விடுவாள் என்று நினைத்தவனாய் அவளைப் பார்த்து ''சரி; உன்னுடைய பிரியப்படியே செய். அதிருக்கட்டும். உன்னைப் பார்த்தால், நிரம்பவும் சிறுவயசாக இருக்கிறது. நீ மாத்திரம் தனியாக வந்து நகையை அடமானம் வைக்கக் காரணமென்ன? உங்களுடைய வீட்டில், வேறே பெரியவர்கள் யாருமில்லையா?'' என்றான்.

வைதேகி ஒருவித கிலேசமடைந்து சிறிதுநேரம் தயங்கிய பின் ''எங்கள் வீட்டில் நானும் என் பாட்டியும்தான் இருக்கிறோம். இப்போது என் பாட்டி ஒருகாரியமாய் தேனாம்பேட்டைக்குப் போயிருக்கிறாள். எங்கள் வீட்டு வாசலில் ஒரு மனிதர் மோட்டார் வண்டியினால் அடிபட்டு ஸ்மரணைதப்பி விழுந்து கிடக்கிறார். அவ்விடத்தில் வேறே மனிதர் யாரும் இல்லை. அவருக்கு உடனே ஏதாவது மருந்து கொடுப்பதற்கு டாக்டரை அழைத்து வருவதற்காக நான் வந்து, டாக்டரைக் கூப்பிட்டேன். அவர் பணத்தைக் கொடுத்தால்தான் வருவேனென்று சொல்லுகிறார். இந்த நகையை இவ்விடத்தில் அடமானம் வைத்துப் பணம் வாங்கிக்கொண்டு வரும்படி அவரே சொல்லி என்னை அனுப்பினார். அதனால்தான் நான் வந்தேன். அந்த மனிதர் இந்நேரம் இறந்துபோய்விட்டாரோ என்னவோ தெரியவில்லை. நான் அவசரமாய் டாக்டரை அழைத்துக்கொண்டு போகவேண்டும். ஆகையால் நீங்கள் என்னைக் கார்க்க வைக்காமல் உடனே பணம் கொடுத்தனுப்பினால், உங்களுக்கு நிரம்பவும் புண்ணியம் கிடைக்கும். நகைகளைப் பார்த்துப் பார்த்து நீங்கள் நிரம்பவும் பழகியவர்களாயிற்றே. இந்த இரண்டு வளையல்களையும் பார்க்கும்போதே, இவை இரண்டும் இவ்வளவு ரூபாய்தான் பெறுமென்பது தெரியாமலா போகும். தயவுசெய்து பார்த்துப் பணங்கொடுத்தனுப்புங்கள்.'' என்று பணிவாகவும் உருக்கமாகவும் கேட்டுக்கொண்டாள். அதைக் கேட்ட மார்வாடி ''நீ இங்கே வந்ததைப் பார்த்தால், உங்கள்

வீடு இதற்கு நிரம்பவும் சமீபத்தில்தா னிருக்கும்போ லிருக்கிறது.'' என்றார்.

வைதேகி "ஆம். எங்கள் வீடு இதோ பக்கத்திலிருக்கும் ஆலங்காத்தா பிள்ளை தெருவில்தான் இருக்கிறது.'' என்றாள்.

மார்வாடி:—ஓகோ! பக்கத்தில்தா னிருக்கிறதா! ஆலங்காத்தா பிள்ளை தெருவில் உங்கள் வீடு எவ்விடத்தில் இருக்கிறது?

வைதேகி:—எங்கள் வீடு மேற்குச்சாரியில் நடுமத்தியில் இருக்கிறது.

மார்வாடி:—ஓகோ! அந்த வீடா! எனக்குத் தெரியுமே! அந்தப் பக்கமாக நான் வரும்போதெல்லாம் உங்கள் வீட்டு மேன்மாடத்தில் உன்னைப் பார்த்த ஞாபகம் உண்டாகிறது. அந்த வீட்டில் ஒரு கிழவிகூட இருந்ததை நான் கவனித்திருக்கிறேன். அந்தக் கிழவி நிரம்பவும் கூனலாக இருப்பாள். அந்த வீடுதானே?

வைதேகி:—(மிகுந்த கிலேசமடைந்து) ஆம், அந்த வீடுதான்.

மார்வாடி:—அந்தக் கிழவிதான் உன் பாட்டியா?

வைதேகி:—ஆம்.

மார்வாடி:—அந்தக் கிழவி தாசி வகுப்பைச் சேர்ந்தவளென்று நான் கேள்விப்பட்டனே?

வைதேகி:—(முன்னிலும் அதிக லஜ்ஜை யடைந்து) அது நிஜந்தான்—என்றாள்.

அதைக் கேட்ட மார்வாடி மிகுந்த துணிபடைந்த தன்றி, அவளிடம் மதிப்புக்குறைவும் மரியாதைக் குறைவும் காட்டத்தொடங்கி "அப்படியானால், மோட்டாரில் அடிபட்ட மனிதர் உன்னிடம் சந்தோஷமாக இருக்க வந்தவர்போ லிருக்கிறது?'' என்று குத்தலாக மொழிந்தான்.

வைதேகியின் மனம் பொங்கி யெழுந்தது; உடம்பு பதறிக் குன்றியது. அந்த மனிதனது துடுக்கான கேள்விக்கு மறுமொழி கூற, அவளது மனம் கூசியதானாலும், தனது அவசர காரியத்தைக் கருதி மௌனமாயிராமல் "ஐயா! ஒரு மனிதர் தமது உயிர்போகும் சமயத்தில் இருப்பதைக் கண்டு நான் ஜீவகாருண்யத்தை எண்ணி

இங்கே வந்தேன். இந்த சமயத்தில் நீங்கள் என்னோடு பரிகாஸ மாகப் பேசிப்பொழுதைப் போக்குவது உங்களுக்கு அழகல்ல. பணம் கொடுக்க முடியுமானால் கொடுங்கள். இல்லையானால், என் நகையைக் கொடுங்கள். நான் போகிறேன்'' என்றாள்.

மார்வாடி முன்னினும் அதிகப் புரளியாய்ப் பேசத்தொடங்கி "என்ன பெண்ணே! நிரம்பவும் கோபித்துக்கொள்ளுகிறாயே! பணம் என்றால், எங்கள் வீட்டு மரத்தில் காய்த்துத் தொங்குகிறதென்று நினைத்துக் கொண்டாயா? நீ கேட்பதற்குள், யாராவது எடுத்துக் கொடுத்து விடுவார்களா? நீ கொடுத்த நகை உண்மையானதா சூதா னதா என்பதையும், அது நீ கேட்கும் தொகைக்குச் சரியான ஈடா என்பதையும், அது திருடப்பட்ட சொத்து அல்லவென்பதையும் நிச்சயித்துக் கொண்டுதானே நான் பணம் கொடுக்கவேண்டும். அடுத்த தெருவுக்குப்போன என் திராசு வராமல், நான் இது எவ்வளவு பெறு மென்று சொல்லமுடியாது. நீ அவசரப்படுகிறதைப் பார்த்தால், இது திருடப்பட்ட சொத்தாக இருக்குமோ என்ற சந்தேகமும் உதிக்கிறது. ஆகையால், நான் என் சந்தேகங்களை யெல்லாம் நிவர்த்தி செய்து கொண்டுதான் பணம் கொடுக்கவேண்டும். அதற்கு அதிக நேரம் பிடிக்கும். அந்தத் துன்பமெல்லாம் வேண்டாம். நான் இன் னொரு யோசனை சொல்லுகிறேன். அதன்படி செய்ய நீ இணங்குவா யானால், நீ இந்த நகையை அடமானம் வைக்கவேண்டியதே இல்லை. நீ கேட்கும் தொகையை நான் சும்மாவே தந்து உடனே உன்னை அனுப்பிவைக்கிறேன்." என்றான்.

வைதேகி "நான் என்ன செய்யவேண்டும்?" என்றாள்.

மார்வாடி "அதை நான் சொல்லவும் வேண்டுமா? அது இன்ன தென்று நீயே யூகித்துக்கொள்ளக் கூடாதா? நீதான் தாசிவகுப் பைச் சேர்ந்தவளென்கிறாயே! அந்த விஷயத்திற்கு நீ சந்தோஷ மாகவே இணங்கிவரலாமே" என்று புன்சிரிப்போடு கூறினான்.

அவனது கபடமான சொற்களைக் கேட்ட நமது மடமங்கையின் தேகம் வெடவெடவென்று நடுங்கத் தொடங்கியது. கைகால்கள் பதறின. உதடுகள் காற்றிலசையும் மாந்தளிர்போல ஆடின. வெட்க மும் துக்கமும் அழுகையும் அவளது மனதில் பொங்கி எழுந்தன.

"ஆகா! உலகத்தில் மனிதர்களுக்கு இப்படிப்பட்ட கல்மனசும் இருக்குமா! ஒருவர் உயிருக்கு மன்ருடிக்கொண்டிருக்கிருர் என்று நான் சொன்னதைக்கேட்டும், இந்த மனிதன் மிருகத்திலும் கேடாகநடந்து கொள்ளுகிருனே! இவன் மனசில் கடுகளவாவது இரக்கம் பச்சாதாபம் முதலியது உண்டாகவே இல்லையே. இவன் இந்த சமயத்தில் துன்மார்க்கமான நினைவைக் கொள்ளுகிருனே! இத்தனைக்கும் நான் தாசி வகுப்பைச் சேர்ந்தவளென்று இவன் தெரிந்துகொண்டதல்லவா காரணம்! நான் ஒரு குடும்பஸ்திரீயாக இருந்தால், இவன் இப்படிப்பட்ட பிரஸ்தாபத்தைச் செய்யத் துணிவானு? தாசி என்ற சொல், இவனை ஒரு நிமிஷத்தில் கெட்டமனிதன் ஆக்கிவிட்டதே! அந்த டாக்டர்கூட, நான் தாசி வகுப்பைச் சேர்ந்தவளென்பதைத் தெரிந்து கொண்டவுடனே, என் வார்த்தையை நம்பாமல் பேசியதன்றி, என்னுடைய நகைகளெல்லாம் சூது நகையாக இருக்குமென்றும், மோட்டார் வண்டியினுல் அடிபட்டுக்கிடக்கும் மனிதருக்கும் எனக்கும் சிநேகமிருக்குமென்றும் தாறுமாருகப் பேச நேர்ந்ததல்லவா! ஆகா! இந்தத் தாசித்தொழிலும் ஒரு தொழிலா? ஒருகடுகளவாவது மானம் வெட்கம் உள்ள மனிதர்கள் இந்தத் தொழிலைச்செய்வார்களா? சே! இந்த தாசி வகுப்பையும், தாசி என்ற சொல்லையும் நெருப்பில் போட்டுச் சுட்டெரிக்க வேண்டும். ஆகா! நான் என்ன ஜென்மமெடுத்தேன்! நான் தாசி வகுப்பைச் சேர்ந்தவள் என்ற இந்த வசையை விலக்கிக்கொள்ள இந்த உலகத்தையே கொடுக்க வேண்டுமானுலும் கொடுத்து விடுவேன்!" என்று நமது பெண்மணி பலவாறு சிந்தித்தவளாய்ச் சிறிதுநேரம் கலங்கி சித்தப்பிரமை கொண்டவளாய் நின்றபின் "ஐயா! இறந்து போகும் தருணத்தில் இருக்கும் ஒரு மனிதரைக் காப்பாற்றுவதற்காக டாக்டருக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று நான் சொன்னதைக் கேட்டீர். அப்படிப்பட்ட மகா பயங்கரமான அபாய வேளையில் நீர் செய்யும் பிரஸ்தாபத்தைப்போல இந்த உலகில் வேறே எந்த மனிதரும் செய்யமாட்டார்களென்பது நிச்சயம். இது கேவலம் மனிதர் சொல்லக்கூடிய வார்த்தையேயல்ல. ஆனுலும் பாதகமில்லை. இது உம்முடைய பிசகல்ல. நான் தாசி வகுப்பில் வந்து பிறந்ததே குற்றம். அது மாத்திரம் அல்ல. கடவுள் பிறருடைய

கஷ்ட நிஷ்டூரங்களைக் கண்டு கொஞ்சமும் இரங்காமல் தமது சுயநல மொன்றையே நாடும் மனிதர்களையும், அவர் படைத்து வைத்திருக்கையில், இதைப்பற்றி நான் கடவுளிடம் முறையிடுவதுகூட உபயோக மற்றதென்றே நினைக்கிறேன். நீர் எனக்குப் பணம் கொடுத்தது போதும்; தயவுசெய்து என் வளையல்களைக் கொடும். நான் போகிறேன்.'' என்றாள்.

அதைக் கேட்ட மார்வாடி ''ஓஹோ! நீ தாசிப்பெண்ணாய்ப் பிறந்து விட்டு, மகாபதிவிரதைபோல, வேதாந்தம் பேசுகிறாயோ! உனக்கு வேறே ஆசை நாயகன் ஏற்பட்டுவிட்டான்போலிருக்கிறது. ஒரு வேளை அவன்தான் மோட்டாரில் அடிபட்டுக் கிடக்கிறானோ என்னவோ. அவன் உன்னைத் தொட்டுத் தாலி கட்டினது தவறிப் போகிறதோ! நீ செய்கிறதையெல்லாம் அவன் பார்த்துக்கொண்டா இருக்கிறான். அல்லது, அவன் இரண்டொரு மாசம் பணங் கொடுக்கத் தவறிப்போனால், நீ சும்மா இருந்து விடுவாயோ! உங்களுடைய ஜாதித் தொழிலெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். நான் ஒரே முடிவாக என் மனசை வெளியிட்டு விடுகிறேன். நீ உள்ளே வந்து அரை நாழிகை சாவகாசம் என்னோடு சந்தோஷமாக இருந்து விட்டுப்போக சம்மதித்தால், இரண்டு பவுனுக்குச் செய்யப்பட்ட இந்த இரண்டு வளையல்களையும் உனக்கு நான் இனாமாகத் தருகிறேன். நீ கையில் போட்டுக்கொண்டு போகலாம். இல்லையானால், நீ போகலாம். உன்னை நம்பி நீ கேட்கும் தொகையை நான் கடன் கொடுக்க முடியாது. நீ யார் என்பது எனக்குத் தெரியாது. எவ்வித அடமானமும் இல்லாமல் நீ பணம் கேட்டால், யார்தான் கொடுப்பார்கள்?'' என்றான்.

அதைக் கேட்ட பெண்மணி மிகுந்த வியப்பும் பிரமிப்பும் கலக்கமும் அடைந்தவளாய் ''ஆகா! என்ன ஆச்சரியம் இது! என்ன படுமோசம் இது! ஐயா! நீர் சொல்வது உமக்கே நியாயந்தானா? இது அடுக்காது! பிறரை வஞ்சித்தால், ஒன்றுக்குப் பத்தாகக் கடவுள் நஷ்டம் வைத்து விடுவார். தயவுசெய்து என் காப்பைக் கொடுத்துவிடும். நான் வேறே யாரிடத்திலாவது பணம் வாங்கிக் கொள்ளுகிறேன்'' என்றாள்.

மார்வாடி மிகுந்த கோபமும் பதைபதைப்பு மடைந்து "சே! போ! யாரடி நீ! தேவடியா நாயே! உன்னை நம்பிப் பணம் கொடுக்க முடியாதென்றால், போகிறாயா? அவமரியாதையான பிரஸ்தாபத்தை யெல்லாம் சொல்லுகிறாயா? இங்கே நிற்காதே! போ, அப்பால். யாராவது கண்டால், என்மேல் கெட்ட அபிப்பிராயம் கொள்வார்கள். நீ தாசி வகுப்பைச் சேர்ந்தவள். உன்னோடு நான் பேசினால்கூட, உன்னிடம் இருக்கும் துர்வியாதி வந்து தொற்றிக்கொள்ளும். எனக்கெதிரில் நிற்காதே. இவ்விடத்தை விட்டுப் போகிறாயா. போலீஸ் காரனைக் கூப்பிடட்டுமா?" என்று அதட்டினான்.

அவனது விபரீதமான சொற்களைக் கேட்ட வைதேகியின் தேகம் அப்படியே குன்றிப்போய் விட்டது. அவளது மனம் பதறித் தவிக்கிறது. வெட்கமும் துக்கமும் பிரமாதமாக எழுந்து வதைக்கின்றன. அந்த சந்தர்ப்பத்தில் அவ்விடத்தில் வேறே யாராவது வந்தால், தனது மானம் போய்விடுமென்ற நினைவு தோன்றியது. ஆகவே, அவள், பரமதுஷ்டனான அந்த மார்வாடியின் முகத்தை மறுபடி பார்க்காமல் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வந்துவிட்டாள்.

அவளது அப்போதைய மனநிலைமையை யூகித்துக்கொள்ள வேண்டுமேயன்றி விவரித்துச் சொல்வது சிறிதும் சாத்தியமற்றதென்றே சொல்லவேண்டும். அவள் அதற்குமேல் தான் என்ன செய்வதென்பதை அறியாதவளாய்ப் பைத்தியங்கொண்டவள்போல ஓட்டமும் நடையுமாகத் தனது தெருவை நோக்கிச்செல்ல ஆரம்பித்தாள். அது கனவோ அல்லது நனவோ என்பதே அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. மார்வாடியின் செய்கையை நினைக்க நினைக்க, அவளது மனம் பிரமிப்பே மயமாக நிறைந்துபோய்விட்டது. அவ்வாறு அவள் போய்க்கொண்டிருந்த தருணத்தில் அவளுக்குப் பின்புறத்தில் குடித்து வெறிகொண்டு குளறிக்குளறிப் பேசிக்கொண்டும், வழியில் போகிறவர்களை அதட்டிக்கொண்டும் வந்த இரண்டு போலீஸ்காரர்கள், தங்களுக்கு முன்னால் பதுங்கிப் பதுங்கி அவசரமாகச் சென்ற வைதேகியைக் கண்டு "யார் அங்கே போகிறது? நில். போகாதே" என்று அதட்டிக் கூறினர்.

அதைக் கேட்டுத் திரும்பிப்பார்த்த பெண்மணி போலீஸ்காரர்கள் கூப்பிடுவதை யுணர்ந்து, ஒருவேளை அவர்கள் மார்வாடியினுல் தூண்டப்பட்டு வந்தவர்களோ என்று நினைத்து மிகுந்த திகிலும் கலவரமுமடைந்து நடுநடுங்கி அப்படியே நின்றனள்.

அவளண்டை நெருங்கி வந்த போலீஸ் ஜெவான்களிருவரும் மலையாள ஜாதியைச் சேர்ந்த முரட்டுமனிதர்கள். அவர்கள் அவளை உற்று நோக்கி அவளிடம் புரளியாகப் பேசத்தொடங்கிய தன்றி, குடிவெறியினுல் தட்டித்தடுமாறி அவள்மீது போய் விழத்தலைப்பட்டனர். அவர்களுள் ஒருவன் குளறுபிடியாகப் பேசத்தொடங்கி "யாரம்மே நீ? நீ பதுங்கிப்பதுங்கி ஓடுகிறதைப் பார்த்தால், ஏதோ குற்றம் செய்துவிட்டு ஓடுகிறவள்போல சந்தேகமாக இருக்கிறது. நிஜத்தை ஒளியாமல் சொல்லிவிடு. இல்லாவிட்டால், உன்னை நாங்கள் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போக நேரும்" என்று அதட்டிக் கூறினுன்.

அதைக்கேட்ட வைதேகி மிகுந்த திகிலும் கலக்கமும் அடைந்து தான் அவர்களுக்கு எவ்விதமான மறுமொழிசொல்வதென்பதை உணராமல் சிறிதுநேரம் தத்தளித்தாள். அவர்கள் மார்வாடியினுல் தூண்டப்பட்டு வந்தவர்கள் அன்றென்பது தெரிந்தது. மார்வாடி தனது வளையல்களை அபகரித்துக்கொண்ட விஷயத்தை அவர்களிடம் தெரிவித்தால், அவர்கள் தன்னை மார்வாடியிடம் அழைத்துக்கொண்டுபோய் நிறுத்தி விசாரணை செய்ய எத்தனிப்பார்களென்றும், அப்போது மார்வாடி தாறுமாறுன தகவல் ஏதாவது சொல்ல முயன்றுல், அதனுல் தனக்கு அவமானம் உண்டாகுமென்றும், அதுவுமன்றி, போலீஸார் தன்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போவதால், வீண் காலஹரணமும், வேறு பற்பல தொந்தரவுகளும் ஏற்படுமென்றும், தனது வீட்டில் இருந்த நோயாளியின் அபாய நிலைமையைக் கருதி, தான் வேறே எங்கேயும் போய்த் தனது காலத்தைப் போக்காமல் தனது வீட்டிற்கு உடனே போய்ச் சேரவேண்டுமென்றும் வைதேகி நினைத்தாளாகையால், தான் போலீஸாரிடம் எல்லா விவரங்களையும் வெளியிடக்கூடாதென்று நிச்சயித்துக்கொண்டு "ஐயா! எங்கள் வீட்டில் ஒரு மனிதர் நோயில் பட்டு நிரம்பவும்

அபாயகரமான நிலைமையில் படுத்திருக்கிறார். அவருக்கு வைத்தியம் செய்ய, டாக்டரை அழைக்கப்போனேன். டாக்டர் முன்னால் பணம் கொடுத்தால்தான் வருவேனென்று சொல்லிவிட்டார். என்னிடம் பணம் இப்போது கை வசத்தில் இல்லை. ஓரிடத்தில்போய் நகையை அடமானம் வைத்துக்கொண்டு பணம் கொடுக்கும்படி கேட்டேன். அவர்கள் கொடுக்கவில்லை. வேறே எங்கேயாவது நகையை வைத்துப் பணம் வாங்கவேண்டுமென்று அவசரமாய்ப் போகிறேன். வேறே விசேஷமொன்றுமில்லை." என்றாள்.

அதைக் கேட்ட ஜெவானொருவன் "ஓகோ! அப்படியா சங்கதி! என்ன நகையை வைத்துப் பணம் வாங்கப்போனாய்?" என்றான்.

வைதேகி:—(சிறிதுநேரம் தடுமாறி) என்னிடம் இப்போது இருப்பது என் காதுக்கம்மல்தான். அதைத்தவிர வேறே நகை ஒன்றுமில்லை. அதை வைத்துத்தான் நான் பணம் வாங்கவேண்டும்.

ஜெவான்:—கம்மல் எத்தனை ரூபாய் பெறும்?

வைதேகி.—இதை நாங்கள் எழுபத்தைந்து ரூபாய்க்கு வாங்கினோம்.

ஜெவான்:—அதை வைத்து எத்தனை ரூபாய் வாங்கப்போகிறாய்?

வைதேகி:—பத்து ரூபாய் வாங்கப்போகிறேன்.

ஜெவான்:—யாரிடம் வைத்து வாங்கப்போகிறாய்?

வைதேகி:—யாராவது தெரிந்த மனிதர்களிடம் வைத்துத்தான் வாங்கவேண்டும்.

ஜெவான்:—தெரிந்த மனிதர்கள் என்றால், இன்னார் என்று சொல்லமுடியாதா?

வைதேகி.—(சிறிது தத்தளித்து) எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள வீட்டு மனிதர்களிடத்தில்தான் கேட்டுப் பார்க்கவேண்டும்.

ஜெவான்:—அவசரமாய்ப் பணம் வேண்டுமென்கிறாய். இனிமேல்தான் மனிதரைத் தேடிப்பிடிக்க வேண்டுமென்கிறாய். அப்படிப் புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் மனிதரிடம் இவ்வளவு அதிக விலையுள்ள கம்மலை வைத்து பத்துரூபாய் வாங்கினால், நகைக்கே மோசம் வந்து விடாதா?

வைதேகி:—என்ன செய்கிறது. அபாய சமயத்தில், மனிதரைப் பார்க்கிறதா, நகையைப் பார்க்கிறதா? நகை போனாலும் போகிறதென்றுதான் எண்ணவேண்டும்.

ஜெவான்:—ஓ! சரிதான். இந்தக் கம்மலுக்குக் கொடுத்த பணத்தை நீ உழைத்துச் சம்பாதித்திருக்க மாட்டாய்போலிருக்கிறது! அப்படி இருந்தால் நீ இம்மாதிரி அலட்சியமாகப் பேசமாட்டாய். இருக்கட்டும். இதோ பக்கத்தில் ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார் இருக்கிறார். அவர் நாணயமுள்ளதக்க மனிதர். அவரிடம் இந்த நகையை வைத்து உனக்குப் பத்து ரூபாய் வாங்கித்தருகிறோம். நகையைப் பெற்றுக்கொண்டதற்கு அவர் ரசீதும் கொடுப்பார். அது உனக்குச் சரியான ஆதாரமாக இருக்கும். ஆனால் வட்டி மாத்திரம் கொஞ்சம் அதிகமாக இருக்கும். ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்கு இரண்டணா வட்டிதான் அவர் கேட்பார். நீ இரண்டொருநாளில் பணத்தைக் கொடுத்து நகையை வாங்கிவிடு—என்றார்.

அதைக்கேட்ட வைதேகி நிரம்பவும் சந்தோஷமடைந்து "வட்டி எவ்வளவு ஆனாலும் கவலை இல்லை. எப்படியாவது நீங்கள் எனக்குப் பத்து ரூபாய் வாங்கிக் கொடுங்கள். நான் இரண்டு மூன்று தினத்தில் நகையை மீட்டுக்கொள்ளுகிறேன்" என்று கூறியவண்ணம், தனது கம்மல்களிரண்டையும் கழற்றி ஜெவான்களிடம் கொடுத்தாள். அவர்களிருவரும் அவளை அழைத்துக்கொண்டு நடந்து இரண்டு மூன்று தெருக்களுக்கப்பாலிருந்த ஒரு சந்திற்குள் நுழைந்து, அவ்விடத்தில் காணப்பட்ட ஒரு பெருத்த வீட்டுவாசலையடைந்தனர். வாசலில் ஆறு பட்டை லாந்தர் எரிந்துகொண்டிருந்தது. சுவரில் பலகையில் தயாரிக்கப்பட்டிருந்த ஏதோ விளம்பரம் மாட்டப்பட்டிருந்தது.

உடனே ஒரு ஜெவான் "அம்மா! இதுதான் செட்டியார் பாங்கி. நீ இப்படியே திண்ணையில் உட்கார்ந்திரு. கால் நாழிகையில் பணம் வாங்கிக்கொண்டு வருகிறோம். உன் பெயர் என்ன?" என்றான்.

வைதேகி "என் பெயர் வைதேகி" என்றாள். உடனே போலீஸார் இருவரும் அந்த வீட்டிற்குள் நுழைந்தனர்.

நமது பெண்மணியான வைதேகி திண்ணைக்குப் பக்கத்தில் தெருவிலேயே நின்றுகொண்டிருந்தாள். அந்த வீட்டிற்குள் அடிக்கடி மனிதர் போவதும் வெளியில் வருவதுமாயிருந்தனர். அவ்வாறு போய்வந்தவர்கள் வைதேகியை உற்று நோக்கி மிகுந்த வியப்படைந்து சிரித்துக்கொண்டே சென்றனர். உட்புறத்தில் மனிதர் கூச்சலிட்டுப் பேசும் ஓசை உண்டாகிக்கொண்டே இருந்தது. வைதேகி கால்நாழிகை, அரைநாழிகை, ஒரு நாழிகையும் பார்த்தாள். ஜெவான்கள் வரவில்லை. வீட்டில் அநாதரவாய்க் கிடந்த மனிதரது நினைவு எழுந்தெழுந்து தூண்டவாரம்பித்தது. கடைசியில் அவள் உள்ளே இருந்து வெளியில் வந்த ஒரு மனிதரைப் பார்த்து "ஐயா! உள்ளே இரண்டு போலீஸ் ஜெவான்கள் வந்தார்களே! அவர்களுக்கு செட்டியார் இன்னும் பணம் கொடுக்கவில்லையோ?" என்று பணிவாக வினவினாள்.

அவ்வாறு வந்த மனிதர் குடிவெறிகொண்டவராய்த் தோன்றினாலும் தம்மைச் சமாளித்துக்கொண்டு வைதேகிக்கு மறுமொழி கூறத்தொடங்கி "என்ன அம்மா! நீ சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே! உள்ளே செட்டியார் யாருமில்லையே! ஜெவான்களுக்கு எந்தச் செட்டியார் பணம் கொடுக்கவேண்டும்?" என்றார்.

வைதேகி பெருத்த கவலையும் கலக்கமுமடைந்து "இது செட்டியாருடைய பாங்கியல்லவா? கொஞ்சநேரத்திற்குமுன் இரண்டு போலீஸ் ஜெவான்கள் உள்ளே வந்தார்களே! அவர்களை நீங்கள் பார்க்கவில்லையா?" என்றாள்.

அந்த மனிதன் "என்ன வேடிக்கை இது! இது செட்டியார் பாங்கி என்று உனக்கு யார் சொன்னது? இது சாராயக்கடையல்லவா? கொஞ்ச நேரத்திற்குமுன் இரண்டு போலீஸ் ஜெவான்கள் வந்தார்கள்; கடைக்காரரை மிரட்டி இனமாகக் கொஞ்சம் சாராயம் குடித்துவிட்டு பின்பக்கத்து வாசல் வழியாக வெளியில் போய்விட்டார்களே! அவர்கள் போய் அரைநாழிகைக்குமேலாகிறதே!" என்று கூறிவிட்டு தெருவோடு போய்விட்டான்.

அவனது சொல்லைக் கேட்ட பெண்மணி திடுக்கிட்டு வியப்பே வடிவமாக மாறி "ஆகா! என்ன ஆச்சரியம்! இப்படிப்பட்ட படுமோச

மும் நடக்குமா? போலீஸாரே இப்படியும் செய்வார்களா!!' என்று நினைத்து பிரமிப்படைந்து சுவரில் மாட்டப்பட்டிருந்த விளம்பரத்தை உற்றுப் பார்த்தாள். கந்தசாமிசா—முதல்ரகம் பட்டை சாராயம் என்ற எழுத்துக்கள் காணப்பட்டன. அதைக் காண, அவளது சிரம் சுழன்றது; மூளை குழம்பியது; தான் சொப்பனத்திலிருப்பவள் போலத் தோன்றிய பெண்மணி "ஆகா! நாம் இவ்வளவு நேரம் சாராயக்கடையின் வாசலிலா நின்றோம். என்ன வெட்கக்கேடு இது! போனவர்கள் வந்தவர்களெல்லாம் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு போனது இதனால்தானே! யாரோ பெண்பிள்ளை சாராயம் குடிக்க வந்திருக்கிறாளென்று எண்ணிக் கொண்டார்கள் போலிருக்கிறது. சே! இனி நான் இங்கே நிற்கக்கூடாது" என்று தீர்மானித்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு விரைவாக அப்பால் நடந்து ஓட்டமும் நடையுமாகச்சென்று கால் நாழிகையில் தனது வீட்டையடைந்து கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள்.

உள்ளே, அடிபட்டுப் படுத்திருந்த நோயாளி "அப்பா! அம்மா!" வென்று முக்கி முனகிக்கொண்டிருந்ததைக் கண்டு, அவர் உயிரோடிருப்பதைப்பற்றி களிப்பும், அவர் துன்புறுவதைப்பற்றி மிகுந்த சஞ்சலமும் அடைந்தவளாய் அவரை நோக்கி "ஐயா! இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று அன்போடு வினவினாள். அந்த யௌவனப்புருஷர் நிரம்பவும் ஆவலோடு தமது கண்களைத் திறந்து வைதேகியை நோக்கி "டாக்டர் வந்தாரா?" என் உயிர் போகிறதே! ஐயோ! என்ன செய்வேன்? அப்பா! அம்மா!," என்று நிரம்பவும் பரிதாபகரமாகப் பேசினார்.

அதைக் கேட்ட பெண்மணியின் மனம் உருகி இளகித் தத்தளித்தது. அவருக்குத் தான் என்ன மறுமொழி சொல்வதென்பதை அறியாமல் அவள் இரண்டொரு நிமிஷநேரம் தவித்தாளானாலும், அவரிடம் உண்மையை வெளியிடுவதே நல்லதென்று நினைத்தாள். தன்னிடம் அப்போது யாதொரு ஆபரணமும் இல்லையாதலால், அவரிடம் பணம் இருந்தால், அவர் கொடுப்பாரென்றும், அதைக்கொடுத்து டாக்டரை அழைத்து வரலாமென்றும் நினைத்தவளாய், நமது அருங்குணமடந்தை தான் டாக்டரிடம்போன வரலாற்றையும், மார்வாடி, போலீஸார் ஆகிய மனிதர்களால் ஏமாற்றப்பட்ட வரலாற்றையும்

சுருக்கமாகக் கூறி முடித்தாள். அவளது பரிதாபகரமான வரலாற்றைக் கேட்டதனுல் உண்டான மனஅதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல், அந்த யௌவனப்புருஷர் மறுபடி மயங்கி மௌனத்தில் ஆழ்ந்து விட்டார். பெண்பாவை அவரை இரண்டொரு தரம் கூப்பிட்டுப் பார்த்தாள். மறுமொழி கிடைக்கவில்லை. கால்நாழிகை சாவகாசம் அவள் பொறுத்துப் பார்த்தாள். பேச்சு மூச்சில்லை. அவளது தேகமும் மனமும் கட்டிலடங்காமல் தவித்துப் பறந்தன. அத்தகைய அபாய வேளையில் ஒரு வைத்தியரை அழைத்துவரத் தன்னுல் சாத்தியப்படவில்லையே என்பதை நினைக்க நினைக்க, அவளது உயிரே போகும் போலாய் விட்டது. அவளது மனதில் அப்போது ஒரு நினைவு உண்டாயிற்று; பக்கத்திலிருந்த தெருவில், தன்னுேடு படித்த சிநேகிதை ஒருத்தி நல்ல ஸ்திதியில் இருக்கிருளென்பது ஞாபகத்திற்கு வந்தது. தான் உடனே அவளிடமாவது ஓடி, விஷயத்தை வெளியிட்டு, பத்துரூபாய் பணம் வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்ற யோசனை தோன்றியது. நமது அருங்குண அணங்கு உடனே புறப்பட்டு வாசற்கதவைப் பூட்டாமல் வெறுமையாய் மூடிவைத்துவிட்டு தெருவில் வந்து பக்கத்துத் தெருவை நோக்கி ஓட்டமாக ஓடினுள். அவளது கைகால்களெல்லாம் அலுத்துச் சோர்வடைந்து தள்ளாடின. அடிக்கடி தரையில் கால் தடுக்கிக் கீழேவிழுந்தாள். அடிக்கடி மூளை குழம்பி, மயக்கத்தை உண்டாக்கியதாகையால், ஆங்காங்கு வீட்டுத்திண்ணைகளைப் பிடித்துக்கொண்டு நிற்பதும், போவதுமாய்ச் செய்து தனது சிநேகிதையின் வீட்டை யடைந்தாள். வீட்டிற்கு ஆகாமல் மூன்றுவது கட்டில் படுத்திருந்த அவளது சிநேகிதையண்டை நமது வைதேகி போய்ச் சேருவது நிரம்பவும் பிரயாசையாக முடிந்ததோடு, அதற்கு அரைநாழிகை சாவகாசம்பிடித்தது. அதற்குமேல், வைதேகி அவளிடம் தனது வரலாற்றைக்கூற, அவள் தனது தாய் தகப்பன்மார்களிடம் அதைத் தெரிவித்து, அவர்களது ஆக்ஷேபணைகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லி, பணம் கொடுக்கச் செய்வதற்குள் ஒருநாழிகை நேரம் கழிந்தது. அதை வாங்கிக்கொண்ட வைதேகி பணம் கிடைத்ததைப்பற்றி அடக்க இயலாத களிப்பும் உற்சாகமும் அடைந்தவளாய், முன்னிலும் அதிக விசையாக ஓடி, டாக்டர் லக்ஷ்மிகாந்தம் நாயுடுவின் வீட்டையடைந்து அவரிடம் ரூபாய் ஏழைக்கொடுத்து அவரை அழைத்தாள்.

டாக்டர் "இந்த ரூபாய் கொண்டுவருவதற்கு உனக்கு இவ்வளவு நேரமாயிற்று? அவருடைய உயிர் போனாலும் போயிருக்கும்போ லிருக்கிறதே! உயிர்போய், கால் நாழிகை, அரைநாழிகை சாவகாசம் கழிந்திருந்தால், நான் அவருடைய உயிரைத் திருப்ப முடியும். அதற்குமேல் அதிக காலம் கழிந்திருந்தால், உயிரைத் திருப்ப சாத் தியப்படாது. இருந்தாலும் பாதகமில்லை. ஓர் ஆசை பார்க்கலாம். நீ போய் ஒரு வண்டி கொண்டுவா" என்றார்.

அதைக் கேட்ட வைதேகி வெளியில் போய்த் தெருக்கோடியை அடைந்து அவ்விடத்தில் நின்ற குதிரை வண்டிக்காரனை அழைக்க, டாக்டரை அழைத்துப்போவதற்கு என்பதை அவன் உணர்ந்து, ஒரு பர்லாங்கு தூரமுள்ள இடத்திற்குப்போக ஒருரூபாய்கொடுக்கவேண்டு மென்று கேட்க, அதற்கு வைதேகி இணங்கி வண்டியோடு டாக்ட ரிடம் வந்துசேர்ந்தாள். உடனே டாக்டரும் வண்டியில் உட் கார்ந்துகொள்ள, பத்து நிமிஷத்தில் வண்டி வைதேகியின் வீட்டு வாசலையடைந்தது. இருவரும் கீழே இறங்கினார்கள். வாசற்கத வண்டை போன வைதேகி, அது வெளியில் தாளிடப்பெற்றிருந்த தைக் கண்டு திடுக்கிட்டு நின்றாள். தான் அங்கிருந்து போனபோது கதவைத் தாளிடாமல் வைத்துப்போனதாக நினைவுண்டாயிற்று. அப்படி இருக்க, யார் வெளிப்பக்கத்தில் தாளிட்டிருப்பார்கள் என்ற யோசனையும் மனக்குழப்பமும்உண்டாயிற்று. அந்த நிலைமையில்அவள் தாளை நீக்கிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். டாக்டரும் அவளுக்குப் பின்னால் உள்ளே நுழைந்தார். ஆனால் நடைத்திண்ணையில் படுக்கவைக்கப்பட் டிருந்த நோயாளி காணப்பட வில்லை. வைதேகி மிகுந்த பிரமிப்பும் கலவரமுமடைந்து அது கனவோ நினைவோவென்று சந்தேகித்து "என்ன ஆச்சரியம் இது! இங்கே படுத்திருந்தவரைக்காணோமே! நான் அவரை விட்டுப்புறப் பட்டுப் போனபோது, அவர் ஸ்மரணை தப்பிப்படுத்திருந்தாரே! ஸ்மரணை தெளிந்திருந்தால் கூட, அவரால் எழுந்து காலை ஊன்றி நிற்கவே முடியாதே! அவர் எப்படி மாயமாய்ப்போனாரென்பது தெரியவில்லையே?" என்று கூறிய வண்ணம், அங்கிருந்த விளக்கை எடுத்துக்கொண்டு வீட்டின் உட்புறத்திற்கு ஓடி மேன்மாடம் முத லிய இடங்களிலெல்லாம் தேடிப்பார்த்து விட்டு, மறுபடி நடைக்கு

வந்து வீட்டுவாசலை யடைந்து, அண்டை வீட்டுக்காரர்கள் யாராவது வெளியில் வந்திருக்கிறார்களோ வென்று கவனித்துப் பார்த்தாள். எவரும் காணப்படவில்லை. இன்னது செய்வதென்பதை உணராதவளாய் வைதேகி திக்பிரமைகொண்டு திகைத்து சித்திரப்பதுமை போலப் பேச்சு மூச்சற்று நிற்க, டாக்டர் அவளைப் பார்த்து ஹேளனமாக நகைத்து "என்ன வேடிக்கை இது? நான் நின்றுகொண்டே இருக்கிறேன். நோயாளியைக் காட்டாமல் நீ யாரையோ பார்த்துக் கொண்டு நிற்கிறாயே! எனக்கு நேரமாகிறது. நான் போகலாமா?" என்றார்.

அதைக் கேட்ட வைதேகி என்ன மறுமொழி கூறுவதென்பதை அறியாமல் சிறிதுநேரம் தயங்கி "ஐயா! நடைத்திண்ணையில் படுத்திருந்த நோயாளியைக் காணோம். அவர் ஒருவேளை எழுந்து வெளியில் போய்விட்டாரோ என்னவோ தெரியவில்லை. தங்களுக்கு அவசரமாயிருந்தால், வீட்டிற்குப் போங்கள்." என்றாள்.

அதைக் கேட்ட டாக்டர் "சரி; இதே வண்டியில் நான் வீட்டுக்குப் போகிறேன். போவதற்கு வண்டி வாடகையைக் கொடு." என்றார். பெண்மணி தனது கலவரத்தில் பணத்தைப் பொருட்படுத்தாமல் மறுபடி ஒரு ரூபாய் பணத்தை எடுத்து அவரிடம் கொடுக்க, அவர் அதை வாங்கிக்கொண்டு அதே வண்டியில் போய் விட்டார்.

தனிமையில் விடப்பட்ட நமது அருங்குண மணியின் நிலைமை எப்படி இருந்ததென்பதை மனதால் பாவித்துக்கொள்ள வேண்டுமே யன்றி, அதை விவரித்துக் கூறுவது சாத்தியமற்றதென்றே சொல்லவேண்டும். மோட்டாரினால் அடிபட்டு வீழ்ந்தவரது மகா வசீகரமான அழகைக் கண்டு மோகித்துப் போனதனால், அவள் அவ்வாறு கலங்கி உருகினாளா, அல்லது, அவர் தமது துர்ப்பலமான நிலைமையில் சிகிச்சை செய்துகொள்ளாமல் மாயமாய் மறைந்து போய்விட்டதைப் பற்றிக் கலவரமடைந்து தவித்து உருகினாளா, அல்லது, இரண்டு காரணங்களினாலும் துயரக் கடலில் ஆழ்ந்தாளா என்பதை நிச்சயிப்பது நிரம்பவும் துர்லபமாக இருந்தது. டாக்டரின் நடத்தை, மார்வாடியின் மோசம், போலீஸாரின் வஞ்சகம்

முதலியவற்றினால், அவள் தளர்ந்து சோர்வடைந்து வியப்புற்று விசனித்து, ஒவ்வொரு சம்பவத்தையும் எண்ண எண்ண, அவளது நிலைமை சொல்லினால் விவரிக்கமுடியாத பரம வேதனையான நிலைமையாக இருந்தது. அந்த மனிதர் வீடு போய்ச்சேர்ந்தாரா, பிழைத்துக்கொண்டாரா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு அவரது விலாசத்தைக் கூடத் தான் தெரிந்துகொள்ள இயலாமற் போயிற்றே என்ற விசனமும், ஏக்கமும், கலக்கமும் பிரமாதமாக எழுந்து வதைக்கத் தொடங்கின. தான் அதற்குமேல் என்ன செய்வதென்பதை நிச்சயிக்கமாட்டாமல், சிறிதுநேரம் விளக்கும் கையுமாய் வீட்டு வாசலில் நின்ற பிறகு அந்தப் பேடன்னம் கதவை மூடிக்கொண்டு உள்ளே சென்று மேன்மாடத்தையடைந்து விசிப்பலகையில் உஸ்ஸென்று ஓய்ந்து உட்கார்ந்தாள். மோட்டார் வண்டியினால் அடிபட்டு விழுந்தவர் அலங்கோலமாய்ப் படுத்திருந்த நினைவும், அவரது இரத்தக் காயத்தைப் பார்த்த நினைவும் தோன்றத் தோன்ற, அந்த வீட்டில் அந்த இரவில் தனியாக இருப்பது முற்றிலும் பயங்கரமாக இருந்தது. எங்கே பார்த்தாலும், மனிதரது பிணம் வந்து நிற்பது போன்ற ஒருவித பீதி உண்டாகி அவளது தேகத்தை நடுக்குவித்தது.

அவ்வாறு அவள் நரக வேதனைப்பட்டு உட்கார்ந்திருந்த சமயத்தில் யாரோ வாசற்கதவை இடித்த ஓசை கேட்டது. வைதேகி திடுக்கிட்டெழுந்தாள். ஒருவேளை தனது பாட்டி திரும்பிவந்து விட்டாளோ என்ற திகிலும், கலக்கமும் உண்டாயிற்று. அவள் எழுந்து கீழே இறங்கிப்போய் வாசற்கதவைத் திறந்துவிட்டாள். கதவிற்கு வெளியில் வேறே இரண்டு போலீஸ் ஜெவான்களும், செங்காங்கடை சாரங்கபாணி முதலியாரும் நின்றுகொண்டிருந்தனர். வைவேகியின்மீதும், தரையிலும் இருந்த இரத்தக்கரையை அவர்கள் உற்று நோக்கினர். உடனே சாரங்கபாணி முதலியார் "இந்த அம்மாள்தான் வீணையை விற்றுப் பணம் வாங்கினது" என்றார்.

அதைக் கேட்ட ஜெவான்களுள் ஒருவன் "அம்மா! நீ இவருக்கு ஒரு வீணையை விலக்கு விற்றுப் பணம் வாங்கிக்கொண்டாயாம். இன்று இராத்திரி எட்டு மணிக்கு அதைப் பெட்டியில் வைத்து

இவரிடம் ஒப்புவிப்பதாய்ச் சொன்னாயாம். அதன்படி இவர் வந்து பெட்டியைக் தூக்கி வண்டியில் வைத்துக்கொண்டு போய்ப் பார்த்தாராம். ஒரு கிழவியை அடித்துக் காயப்படுத்தி நீ அதற்குள் போட்டு அனுப்பி இருக்கிறாயாம். அதற்கு அநுகூலமான உன் சேலையிலும் தரையிலும் இரத்தக்கரை இருக்கிறது. ஆகையால், உன்னைக் கைது செய்திருக்கிறோம். எங்களோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவேண்டும். வீட்டைப் பூட்டிக்கொண்டு வா வெளியில்'' என்றனர்.

அதைக் கேட்ட பெண்மணி இடிவிழப் பெற்றவள்போல அப்படியே பிரமித்து ஸ்தம்பித்துக் கல்லாய்ச் சமைந்து மருள மருள விழித்துக்கொண்டு ஊமையாக நின்றுவிட்டாள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182820
சென்னை 600 0

வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

# இங்கிலீஷ் உபாத்தியாயர்

என்ற

புதிய புஸ்தகம் வெளியாகி இருக்கிறது. மாணவர்கள் 15 வருஷ காலம் பள்ளிக்கூடம் சென்று கற்றுக்கொள்ளும் இங்கிலீஷ் பாஷையை இந்தப் புஸ்தகத்தை வைத்துக்கொண்டே மூன்று மாத காலத்தில் கற்றுக்கொள்ளலாம். 352 பக்கங்கள் உள்ள புஸ்தகத்தின் விலை ரூ. 1-8-0

இதற்கு ஸ்ரீமான் வடுவூர். கே. துரைஸாமி ஐயங்கார் அவர்கள் B. A. அருமையான முகவுரை எழுதி இருக்கிறார்.

விலாஸம்:—

நாவல் புக் டிப்போ,

3, இருசப்பன் சந்து,

மிண்ட் பில்டிங்ஸ், மதராஸ்.

எங்களிடம் கிடைக்கக்கூடிய புஸ்தகங்கள்.

## வடுவூர்-கே. துரைசாமி ஐயங்காரவர்கள் B. A.யால்

## எழுதப்பட்டவை.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| விலாஸவதி | 1-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 8 |
| மதனகல்யாணி | 1-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 3-ம் பாகம் | 1 | 8 |
| பூர்ணசந்திரோதயம் | 1-ம் பாகம் | 1 | 12 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 12 |
| ஷை | 3-ம் பாகம் | 2 | 0 |
| ஷை | 4-ம் பாகம் | 2 | 0 |
| காளிங்கராயன்கோட்டை ரகசியம் | 1-ம் பாகம் | 2 | 0 |
| ஷை | 2-ம் பாகம் | 2 | 0 |
| சௌந்தர கோகிலம் | 1-ம் பாகம் | 1 | 8 |
| மேனகா | 1-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 8 |
| கும்பகோணம் வக்கீல் அல்லது திகம்பரசாமியார் | 1-ம் பாகம் | 1 | 8 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 8 |
| பாலாமணி அல்லது பக்காத்திருடன் | 1-ம் பாகம் | 1 | 4 |
| ஷை | 2-ம் பாகம் | 1 | 4 |
| வஸந்த மல்லிகா | | 1 | 8 |
| வித்தியாசாகரர் | | 1 | 4 |
| திலோத்தமா | | 0 | 12 |
| மாணிக்கவாசகர் | | 0 | 8 |

இதர நூலாசிரியரின் புஸ்தகங்களும் மற்ற தமிழ் இலக்கண, இலக்கிய இதிகாச புராணங்கள் யாவும் அகப்படும்.

**ஜெகன்மோகினி ஆபீஸ்,**

26, கோடித் தெருவு,

திருவல்லிக்கேணி.

PRINTED AT THE NOBLE PRESS, MADRAS, S. E.